DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial
Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1550
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday December 19, 2025

## Ontario's MPP Logan Kanapathi spoke about 'Ditwah' cyclone and recent disaster, which destroyed Island of Sri Lanka, during his Members' Period , at Queens Park

# இலங்கைத் தீவை தாக்கி அழித்த "டித்வா" புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகியவை தொடர்பாக ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் உணர்வுபூர்வமாக விளக்கமளித்த எம்பிபி லோகன் கணபதி!



கௌரவ சபாநாயகர் அவர்களே!

நவம்பர் 28 ஆம் திகதி இலங்கைத் தீவை அழித்து, நினைத்துப் பார்க்க முடியாத பெரும் இழப்பை ஏற்படுத்திய, மிகவும் கொடிய சூறாவளியான "டிட்வா"வைப் பற்றிப் பேசுவதற்காக இன்று நான் கனத்த இதயத்துடன் இந்த சபையில் எழுந்து நிற்கின்றேன்.
இது 2004 -இல் நடைபெற்ற சுனாமியை விட மோசமானது என்பதைக் குறிப்பிடுவதோடு. இதுவரையில் 600 க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர், 190 பேர் காணாமல் போயுள்ளனர். 500,000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. மேலும் 1.7 மில்லியனுக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலையும் பகிர்ந்து கொள்கின்றேன்..
இலங்கையின் மத்திய, மலைநாட்டுப் பகுதிகள், குறிப்பாக கண்டி, நுவரெலியா, பதுளை போன்ற பல மலைப்பகுதிகள் நிலச்சரிவுகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. நிலச்சரிவுகளால் சில கிராமங்கள் முற்றாகவே புதையுண்டு போயுள்ளன.
(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## Toronto's Royal LePage Ignite Realty Brokerage, hosts it's 9th Annual Awards Night-2025 as a Colorful Event.

# ரொறன்ரோவில் இயங்கிவரும் Royal LePage Ignite Realty Brokerage நிறுவனம் நடத்திய சிறப்பான 9வது ஆண்டு விற்பனை விருதுகள் வழங்கும் வைபவம்

ரொறன்ரோ பிராந்தியத்தில் வெற்றிகரமாக இயங்கிவரும் **Royal Lepage Ignite Realty Brokerage** நிறுவனம் நடத்திய சிறப்பான 9வது ஆண்டு விற்பனை விருதுகள் வழங்கும் வைபவம் கடந்த 13ம் திகதி சனிக்கிழமையன்று ஸ்காபுறோவில் அமைந்துள்ள விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதற்காக ஏற்பாடுகளை நிறுவனத்தின் தலைவரும் விற்பனை முகவருமான சுகன் சிவராஜா தனது சகோதரர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் தொண்டர்கள் சகிதம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார் ஒரு அழகிய வண்ண விழாவாக அவர்களது வைபவம் இடம்டபெற்றது."
(தொடர்ச்சி 9ம் பக்கம்)



தமிழில் உரையாடி உங்கள் நெருக்கடியான நேரத்தில்
எமது சேவைகளை பூரண திருப்தியுடன் பெற்றுக்கொள்ளுங்கள்
SMART RESTORATION
We work with your insurance company
ARUN ANANTH
24/7 EMERGENCY SERVICES
647-849-4444 ( Cell )
1-833-SMART 09 ( Office )
info.smartrestoration@gmail.com
smart-restoration.net
SERVICES
Water and flood services
Sewage clean up
Mold remediation
Fire & smoke
Trauma
24/7/365 days
LICENSED
INSURED
CERTIFIED

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851


Season's
Greetings!
Hon.
TIM
HODGSON
MP - Markham-Thornhill
16 Esna Park Drive, Unit 107, Markham ON L3R 5X1
905-479-1269
Tim.Hodgson@parl.gc.ca
www
timhodgsonMP.ca


Wishing you and your family a
Merry Christmas &
a Happy New Year!
VIJAY
THANIGASALAM
MPP - Scarborough-Rouge Park
8130 Sheppard Avenue East, Unit 105,
Scarborough, ON M1B 3W3
416-283-8448 • vijay.thanigasalam@pc.ola.org
vijaythanigasalam.ca

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com




உதயன் கதிரோட்டம்

# குடிவரவாளர்களினாலும் கட்டியெழுப்பப்பெற்ற கனடிய தேசத்தில் தங்கள் முயற்சியினால் உயர்ந்தவர்களின் கதைகளை ஆர்வத்துடன் செவிமடுக்கும் பல்லின மக்கள்!

உலகின் பல நாடுகளிலும் பல்வேறு இடுக்கண்களைச் சந்தித்து உறவுகளையும் உடமைகளையும் இழந்து கண்களில் கண்ணீரோடு வந்தடையும் குடியேற்ற வாசிகளை அன்புடன் வரவேற்று அரவணைத்து ஆதரவை வழங்கியும் உறைவிடங்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும் கனடிய தேசத்தை நாம் என்றும் வணங்கவேண்டும்.

இந்த அற்புதமான தேசத்தின் நான்கு திசைகளிலும் பல உலக மொழிகளை தங்கள் அன்னையின் மொழியாகக் கொண்டவர்கள் இலட்சக் கணக்காய் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்குரிய அனைத்து சுதந்திரங்களும் கனடிய அரசுகளால் வழங்கப்பெற்றுள்ளன. தங்கள் மதம் சார்ந்த நிறுவனங்களை அல்லது வழிபாட்டுத் தலங்களை நிறுவவும். அவரவர் மொழி மற்றும் இனம் சார்ந்த பண்பாட்டுக் கோலங்களை இந்த மண்ணிலும் இட்டுக் கொள்ளவும் அவற்றை அழகு பார்க்கவும் இந்த தேசத்தில் அனுமதி உண்டு. அரசாங்க பாடசாலைகளில் அவரவர் மொழிகளைக் கற்று தொடர்ந்து அந்த

மொழியிலு் பெற்ற புலமைக்குரிய புள்ளிகளையும் சேர்த்துக் கொண்டு உயர் கல்வி பெறும் பல்கலைக் கழகங்கள் அனுமதி பெறவும் பயன்பெறும் அற்புதமான சந்தர்ப்பத்தையும் சமத்தவத்தையும் இந்த தேசம் வழங்கி வருகின்றது.

இவ்வாறான ஒரு ஆரோக்கியமான வாழ்க்கைப் பயணத்தை இந்த கனடிய தேசத்தில் தொடர்ந்து வருபவர்கள் எவரானாலும் உயர் கல்வி பெறுவதிலோ அன்றி அரசியலில் காலூன்றி மக்களுக்கும் தேசத்திற்கும் சேவையாற்றும் வாய்ப்புக்களையும் இங்கு பல இனத்தவர்களும் பெறுகின்றார்கள். அந்த வகையில் நேற்று வியாழக்கிழமை 18ம் திகதியன்று மார்க்கம் நகரில் இயங்கிவரும் ஒரு சேவை வழங்கும் அமைப்பான ைஅஅபைசயவெளவழசல. உய இனது ஏழாவது அமர்வு இடம்பெற்றது. அதில் மார்க்கம் நகரத்தில் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று தொடர்ந்து கனடிய அரசியல் வானில் பிரகாசிக்கும் இரண்டு பிரமுகர்கள் உரையாளர்களாக அழைக்கப்பெற்றிருந்தார்கள்.

அவர்களில் ஒருவர் நம்மவர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்ற ஒருவர். மார்க்கம் மாநகர சபைக்கு முதற்தடவையாக அங்கத்தவராக தேர்ந்தெடுக்கப்பெற்று அதன் மூலம் கனடாவில் அரசியல் பதவியொன்றுக்கு முதற் தடவையாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற தமிழர் என்ற பெருமைக்குரியவரான லோகன் கணபதி அவர்கள்.

அடுத்த அரசியல் பிரமுகர் இத்தாலி தேசத்தில் பிறந்து கனடாவில் தனது பெற்றோருடன் குடியேறி பின்னர் அரசியலில் காலடி எடுத்து வைத்து மார்க்கம் மாநகர சபையின் நகரபிதாவாக தொடர்ச்சியாக பல தேர்தல்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று இன்றும் ஒரு சிறந்த சேவையாளனாக பிரகாசிக்கும் பிராங் ஸ்கெப்பட்டி என்னும் வெற்றியாளர்.

அவர்கள் இருவரும் மேற்படி *immigrantstory.ca* அமைப்பினது அழைப்பை ஏற்று தங்கள் குடிவரவாளர்களுக்குரிய கதைகளை உரைகளாக சபையோருக்கு அளித்தார்கள். அவர்கள் இருவருமே மார்க்கம் நகர சபையில் தான் தங்கள்
அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் எம்மவர் லோகன் கணபதி அவர்கள் மாகாண அரசின் பாராளுமன்ற உறுப்பினராக அடுத்த தளத்திற்குச் சென்று அங்கும் மக்களால் போற்றப்பெறும் ஒருவராக இன்றும் உள்ளார்.

அவர் அங்கு ஆற்றிய நீண்ட உரையானது எமது அடுத்த வார இதழில்
முழுமையாகப் பிரசுரிக்கப்பெறும். எனினும் இன்று எமது ஆசிரிய பீடத்தின் உறுப்பினர்கள் அங்கு சென்று அவரது உரையின் ஒரு பகுதியை செவிமடுக்க முடிந்தது. அதில் லோகன் கணபதி அவர்கள் ஒரு அரசியல்வாதியாக வருவேன் என்று கனவு கூடக் காணவில்லை என்றும் தன்னிடத்தில் இருந்த சில ஆற்றல்களும் சிந்தனைகளும் தன்னை அரசியல் பாதை ஆரோக்கியமாக நகர்த்திச் செல்கின்றது என்று குறிப்பிட்டார்.

இவ்வாரக் கதிரோட்டத்தை வாசிக்கும் எம்மில் பலர் இந்த கனடிய மண்ணும் அகதிகளாகவோ அன்றி குடிவரவாளர்களாகவோ வந்திருப்பார்கள். அவர்களிடத்திலும் பல கதைகள் குவிந்திருக்கும் என்பதும் நிச்சயம். எனவே லோகன் கணபதி அவரிகளின் உரையை நாம் எழுத்தில் அடுத்த வாரம் காண்போம். அதைப்போன்ற "கதைகளை" பலரிடமிருந்து தொடர்ச்சியாகக் கேட்டு வியந்து மகிழ்வோம் என்ற வார்த்தைகளோடு அடுத்த வாரம் "கதிரோட்டம்" பக்கத்தில் சந்திக்கும் வாய்ப்பைப் பெறுவோம் என்று விடைபெறுகின்றோம்!



இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாண விமான நிலையத்துக்கான பயணிகள் முனைய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டல்!



யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கான பயணிகள் முனைய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் 15ம் திகதி அன்று (15-12-2025) மதியம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் விமான நிலையத் தலைவர் சமன் அமரசிங்க, விமான நிலைய இணை முகாமைத்துவ தலைவர் சஞ்சீவ அமரபதி, இலங்கை விமான நிலைய ஆணைக்குழுவின் பிரதித் தலைவர், பொறியியலாளர் ஆகியோரால் சர்வமத வழிபாடுகள் மத்தியில் அடிக்கல் நாட்டப்பெற்றது.

குறித்த கட்டடம் அமைப்பதன் மூலம் பயணிகளின் எதிர்நோக்கும் சிரமங்களை தீர்க்க முடியும் என எதிராபார்க்கப்படுதாறது.



# யாழ்ப்பாணத்தில் தாயார் பாடங்களைப் படிக்குமாறு கூறியதால் 15 வயது மாணவி தவறான முடிவெடுத்து உயிர்மாய்ப்பு!

யாழ்ப்பாணத்தில் தாயார் பாடங்களைப் படிக்குமாறு கூறியதால் மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார். வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த பார்த்தீபன் கவிசனா (வயது 15) என்ற மாணவியே இவ்வாறு உயிர் மாய்த்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த மாணவியின் தாயார் அந்த மாணவியை பாடங்களை படிக்குமாறு தினமும் கூறுவதால் மாணவி மன விரக்தியில் இருந்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதியும் இவ்வாறு தாயார் கூறியதால் குப்பைகளை எரிப்பது போல் பாசாங்கு செய்து பெற்றோலை தன்மீது ஊற்றி தனக்கு தானே தீ பற்ற வைத்துள்ளார்.

இதன்போது அயல்வீட்டில் உள்ளவர்கள் மாணவியை காப்பாற்றியவேளை குறித்த மாணவி அவர்களுக்கு சம்பவத்தை தெரிவித்துள்ளார்.

பின்னர் தீக்காயங்களுக்குள்ளான அவரை மந்துவில் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றிரவு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.



# யாழ்ப்பாணம். கோட்டையை சுற்றி எல்லைக்கல் நாட்டுப் பணியில் தொல்லியல் திணைக்களம்!

யாழ்ப்பாணம் கோட்டையை சுற்றிவர உள்ள பகுதியில் தொல்பொருள் சின்னங்கள் புதைந்திருக்கலாம் என்ற வகையில் தொல்பொருள் திணைக்களம் எல்லைக் கல் இடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

இதனால் முற்றவெளி மைதானத்திற்குள் நுழைய முடியாதவாறு எல்லைக்கல் நாட்டப்படுவதாக யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் ரத்னம் சதீஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் எல்லை கல்லின் அளவிற்கு குறித்த எல்லையை இடுமாறு நாங்கள் கோரினோம். அதற்கு அவர்கள், அது தங்களுக்குரிய பிரதேசம் என்றும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாநகர சபை உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடமும் அனுமதி எடுத்த பின்னரே இவ்வாறு எல்லை இல் நாட்டுவதாக கூறினர்.

வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால் உள்ள தமிழாராய்ச்சி படுகொலை நினைவேந்தல் தூபியில் நாங்கள் நினைவேந்தல் செய்வது வழமை. அந்த வளாகத்திற்கு உள்ளே சென்று நாங்கள் நினைவேந்தல் செய்ய வேண்டும். ஆகையால் அந்த பகுதியை விட்டு எல்லை இடுமாறு கோரினோம்.

அதன்படி சிறிய ஒரு வாயில் விட்டு எல்லைக்கல் நாட்டப்படுகிறது. வாயிலுக்கு கதவு போடுமாறு அவர்கள் கூறினர்.

இது தொல்பொருள் திணைக்களத்தின் பகுதி, ஆகையால் யாரும் இதனை தடுக்க முடியாது என்று கூறுகின்றனர். யாழ். மாநகர சபை இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கிறதா என பார்ப்போம் என்றார்.




# சாகர் பந்து நடவடிக்கையின் கீழ் இலங்கைக்கு மீண்டும் நிவாரண பொருட்கள் – இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவிப்பு!

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயம் 17ம் திகதி புதன்கிழமை அன்றையதினம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

டிசம்பர் 15 ஆம் திகதி, இந்தியாவிலிருந்து மேலும் 50 தொன் உலர் உணவுப் பொருட்கள இந்திய கடலோர காவல்படை கப்பலான சௌர்யா மூலம் இலங்கையை வந்தடைந்தது. இந்தப் பொருட்கள் இந்தியாவிற்கான துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் சத்யஞ்சல் பாண்டே, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து துணை அமைச்சர் கௌரவ ஜனிதா ருவான் கொடித்துவக் குவிடம் ஒப்படைக்கப்பட்டன. மேலும் பேரிடர்களால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு தொடர்ந்து ஆதரவை வலுப்படுத்தின.

டிசம்பர் 14 ஆம் திகதி இந்திய விமானப்படையின் C-17 விமானம் குளோப்மாஸ்டர் விமானம் இலங்கைக்கு வந்து சேர்ந்தது. இது 10 தொன் மருந்துகள் மற்றும் 15 தொன் உலர் உணவுப் பொருட்களை வழங்கியது. அதே நேரத்தில் கண்டிக்கு அருகிலுள்ள மஹியங்கனையில் மனிதாபிமானப் பணி வெற்றிகரமாக நிறைவடைந்ததைத் தொடர்ந்து, இந்திய இராணுவ மருத்துவமனை குழுவினர் திரும்பி வருவதற்கும் உதவியது.

முக்கியமான சாலை இணைப்பை மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் சீராக நடந்து வருகின்றன. சிலாபம் மற்றும் கிளிநொச்சியில் உள்ள பாலத்தளங்களின் ஆயத்த நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. சேதமடைந்த கிளிநொச்சி பாலம் முழுமையாக அகற்றப்பட்டு, பெய்லி பாலம் நிறுவுவதற்குத் தயாராக உள்ளது. இது பிராந்தியத்தில் மென்மையான போக்குவரத்து மற்றும் மேம்பட்ட அணுகலை எளிதாக்குகின்றது.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் கௌரவ அனுர கருணாதிலக மற்றும் துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் சத்யஞ்சல் பாண்டே ஆகியோரின் முன்னிலையில், கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் (CWIT) இலங்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு 100 மில்லியன் ரூபாயை பங்களிப்பாக வழங்கியது. அதானி துறைமுகங்கள், ஜான் கீல்ஸ் குழுமம் மற்றும் இலங்கை துறைமுக ஆணையம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு கூட்டு முயற்சியாக CWIT செயற்படுகிறது.

இந்திய கலாச்சார சங்கம் (ICA), டிசம்பர் 14 அன்று கொழும்பில் இரண்டாவது ஜனசக்தி லைப் ICA சர்வதேச அரை-மரத்தனை வெற்றிகரமாக நிறைவு செய்தது. 39 நாடுகளைச் சேர்ந்த 2,500க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களட் இதில் பங்கேற்றனர். இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் இலங்கை விளையாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட இந்த நிகழ்வில் தடகள சிறப்பையும் சமூக தாக்கத்தையும் கொண்டாடினர். ஆண்கள் பிரிவில் வெற்றியாளரான கிப்சாங் இசிபெட் மூசஸ், தனது மில்லியன் இலங்கை ரூபா பரிசுத் தொகையை ICA அனாதை இல்ல நீர் சுத்திகரிப்பு திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கினார். இந்த ஆண்டின பதிப்பளவிலும் முக்கியத் துவத்திலும் வளர்ச்சி பெற்றதுடன், சர்வதேச நட்புறவை மேம்படுத்தி. இலங்கை முழுவதும் உள்ள சமூகங்களுக்கு கணிசமான பயன்களை வழங்கியது.

டித்வா சூறாவளிக்குப் பிறகு இலங்கை விமானப்படையுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பில் நிவாரணப் பணிகளை ஆதரித்து, ஆபரேஷன் சாகர பந்துவின் கீழ் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 14.12.2025) இந்திய விமானப்படையின் கடைசி அஜ-17 ஹெலிகாப்டரும் தனது பணியை நிறைவு செய்தது. ஹெலிகாப்டரும் அதன் குழுவினரும் டிசம்பர் 14 அன்று இந்தியா திரும்பினர். 2025 நவம்பர் 29 முதல், மூன்று IAF மற்றும் இரண்டு இந்திய கடற்படை ஹெலிகாப்டர்கள் இந்த நடவடிக்கையில் பங்கேற்று. 272 உயிர் பிழைத்தவர்களை மீட்டு, இலங்கை துருப்புக்களை விமானத்தில் ஏற்றி, 61 டன்களுக்கும் அதிகமான நிவாரணப் பொருட்களை வழங்கி, இலங்கைக்கு அவசர நேரத்தில் உறுதியாக நின்று செயற்பட்டது.

ஆபரேஷன் சாகர் பந்துவின் சுரக்கம் (டிசம்பர் 17, 2025 வரை) நவம்பர் 28, 2025 அன்று ஆபரேஷன் சாகர் பந்து தொடங்கப்பட்டதிலிருந்து, இந்தியா இலங்கைக்கு உல உணவுப் பொருட்கள், கூடாரங்கள், தார்பாய்கள், சுகாதாரம் பொருட்கள், ஆடைகள், நீர் சுத்திகரிப்பு அமைப்புகள் மற்றும் 14.5 தொன் மருந்துகள் மற்றும் அறுவை சிகிச்சை உபகரணங்கள் உட்பட 1.134 தொன்களுக்கும் அதிகமான மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளது. மேலும் 60 தொன் சிறப்பு உபகரணங்கள் கூடுதலாக உள்ளன. இந்திய கடற்படைக் கப்பல்களான ஐஎன்எஸ் விக்ராந்த், ஐஎன்எஸ் உதயகிரி, ஐஎன்எஸ் சுகன்யா, 54. எல்சியு-57, எல்சியு-51, மற்றும் ஐஎன்எஸ் கரியல் ஆகியவை இந்திய கடலோர காவல்படை கப்பலி சௌர்யாவைத் தவிர, கொழும்பு மற்றும் திருகோணமலைக்கு அதிக அளவிலான நிவாரணப் பொருட்களை வழங்கின. தேசிய பேரிடர் மீட்புப் படையின் இரண்டு குழுக்கள் (கே9 பிரிவுகளுடன் 80 பணியாளர்கள்) உடனடி தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன. அதே நேரத்தில மஹியங்கனையில் அமைக்கப்பட்ட 85 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய இராணுவ கள மருத்துவமனை 7,000 க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு உயிர் காக்கும் மருத்துவ சேவையை வழங்கியது. கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் BHISHM ஆரோக்கிய மைத்ரி கனசதுரங்களைப் பயன்படுத்தும் மருத்துவ மையங்கள் நிறுவப்பட்டன. மேலும் முக்கியமான இணைப்பை மீட்டெடுக்க 48 பொறியாளர்களுடன் 248 தொன் பெய்லி பால கூறுகள் விமானம் மூலம் கொண்டு வரப்பட்டன. 5 இந்திய விமானப்படை மற்றும் கடற்படை ஹெலிகாப்டர்கள் உயிர் பிழைத்தவர்களை வெளியேற்றின, துருப்புக்களை ஏற்றிச் சென்றன மற்றும் நிவாரணப்பொருட்களை வழங்கின. இது நெருக்கடியான நேரத்தில் இலங்கைக்கு இந்தியாவின் உறுதியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களை முன்னைய நிலையை விட சிறந்த நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்கிறார் வடக்கு மாகாண ஆளுநர்!

புு. கஜிந்தன்

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களைத் துரிதமாக இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தது போலவே, எதிர்வரும் ஆண்டில் அவர்களை மீளக் கட்டியெழுப்புவதுடன், முன்னைய நிலையை விடவும் மிகச் சிறந்ததொரு வாழ்வியல் நிலைக்கு அவர்களை உயர்த்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ன வேண்டுகோள் விடுத்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் 17ம் திகதி அன்று புதன்கிழமை (17.12.2025) காலை, கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இக்கூட்டத்துக்கு, ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் துறை கௌரவ அமைச்சருமான இ.சந்திரசேகர் தலைமை தாங்கினார்.

“கிளிநொச்சி மாவட்டத்துக்கான இந்த ஆண்டின் இறுதி ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டம் இதுவாகும். இன்றைய கூட்டத்தில் சமீபத்திய பேரிடர் பாதிப்புகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்தே முன்னுரிமை அளித்து ஆராயவுள்ளோம். அத்தோடு, மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதிகளின் பயன்பாடு மற்றும் அதன் முன்னேற்றங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடவுள்ளோம்,” என அமைச்சர் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய இணைத்தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான நா.வேதநாயகன், “2025ஆம் ஆண்டு நிறைவடையும் தருணத்தில், யாரும் எதிர்பாராத வகையில் பாரிய இயற்கை அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. “டித்வா“ புயலால் ஏற்பட்ட இந்தப் பேரிடர், உயிரிழப்புகளை மட்டுமல்லாது பெரும் சொத்திழப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.



பாதிக்கப்பட்ட எமது மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுப்பதில் மத்திய, மாகாண வேறுபாடுகளைக் கடந்து எமது அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினர். இதே உத்வேகத்துடன், சேதமடைந்த உட்கட்டமைப்புகளை மீளக் கட்டியெழுப்பும் பணிகளை அடுத்த ஆண்டில் நாம் முழு வீச்சில் முன்னெடுக்க வேண்டியுள்ளது. அத்தோடு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னைய நிலையை விடவும் மேலானதாக மாற்றுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்,“ என வலியுறுத்தினார். மேலும், இடர் காலத்தில் உதவிய அனைவருக்கும் அவர் தனது நன்றியையும் தெரிவித்தார்.

டித்வா புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக, உட்கட்டமைப்பு சேதங்களுக்குச் சில இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத ஆக்கிரமிப்புகளே முக்கிய காரணம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டதுடன், அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மாவட்டச் செயலகத்தால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மற்றும் மத்திய, மாகாண திணைக்களங்களின் அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்டன. மேலும், புதிய திட்டங்களுக்கான அனுமதியும் இக்கூட்டத்தில் கோரப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.





சட்டவிரோத மணல் அகழ்வு விவகாரம் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் கிளிநொச்சிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரால் முக்கிய தரவுகள் முன்வைக்கப் பட்டதுடன், இதனைத் தடுப்பதற்கான பொறிமுறைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண அமைச்சின் செயலாளர்கள், மாகாண மற்றும் மத்திய அமைச்சின் திணைக்களத் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# மட்டக்களப்பு புன்னைச்சோலை கிராம உத்தியோகத்தரை இடமாற்றுமாறும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் கோரி ஆர்ப்பாட்டம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் அனர்த்தினால் பாதிக்கப்பட்ட புன்னைச்சோலை கிராம சேவகர் பிரிவிலுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறும் கிராம உத்தியோத்தரை இடம் மாற்றுமாறும் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தை 15ம் திகதி அன்று திங்கட்கிழமை முற்றுகையிட்டதையடுத்து குறித்த கோரிக்கை தொடர்பாக விசாரணை செய்து பாதிப்பு தொடர்பாக உண்மை தன்மை அறிந்து மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு வழங்கிய உறுதிமொழி அடுத்து முற்றுகை போராட்டம் கைவிடப்பட்டது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்ததினால் புன்னைச்சோலை கிராமத்தில் பாதிக்கபட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் பணம் வழங்கவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் சம்பவ தினமான அன்று காலை 10 மணிக்கு புன்னைச்சோலை பகுதியில் ஒன்று திரண்டனர்.

இதனையடுத்து அங்கு ஒன்று திரண்ட நூற்றுக்கணக்கான பெண்கள் கிராம உத்தியோகத்தரை இடமாற்றுமாறும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் பணம் வழங்குமாறும் கோரி அங்கிருந்து ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஆரம்பித்து மாமாங்கம் ஆலய வீதி வழியாக சென்று பார்வீதியை அடைந்து அங்கிருந்து அரசடி வீதி சுற்று வட்டத்தை அடைந்து அங்கிருந்து நகர் மணிக்கூட்டு கோபுரத்தை சென்று அங்கிருந்து மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தை சென்று அதனை முற்றுகையிட்டனர்.

இதனை அறிந்து அங்கு சென்ற தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கரந்துரையாடிதுடன் கிராம உத்தியோகத்தர் தொடர்பான தீர விசாரணை செய்வதுடன் நிவாரணம் தொடர்பாக உண்மை தன்மையை கண்டறிந்து மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதாக தெரிவித்த வாக்கு உறுதி ஒன்றை வழங்கியதையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

இதேவேளை இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் க. பிரபு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தங்கள் பாதிக்கபட்டபோது கிராம உத்தியோகத்தர் தம்மை பார்வையிடவில்லை எனவும் இதனூடாக வெள்ள நிவாரணம் தமக்கு கிடைக்க வில்லை எனவும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருந்தாலும் அரசாங்கத்தால் சரியாக கொடுப்பனவு கிடைக்கவில்லை என கோரிக்கைகளை முன்வைத்தனர் எனவே நாங்கள் அரசாங்கம் என்ற ரீதியில் நடவடிக்கை மேற்கொள்வோம் நிவாரணம் கிடைக்கப் பெறுவது சம்பந்தமாக ஒரு பரிசீலனை செய்து கொண்டு சரியாக பாதிக்கபட்டவர்களுக்கு நிவாரணம் கிடைக்க ஏற்பாடு செய்வோம். என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டார் அது வெகு விரைவில் இடம்பெறும்.



அதேவேளை கிராம உத்தியோகத்தர் தொடர்பான குற்றச்சாட்டு தொடர்பாக நாங்கள் உரிய பரிசீலனை செய்து அவரது செயல்பாடு தவறாக இருந்தால் அதற்கான நடவடிக்கை எடுப்போம் என்றார்.

இந்த ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாக தேடி பார்கின்ற போது ஒரு அரசியல் பின்னணியில் செயற்படுகின்றது என்பதை புரிந்து கொண்டுள்ளோம் அத்துடன் கடந்த காலத்தில் மக்களின் நிதிகளை வீணடித்தவர்கள் அவர்களின் கோரிக்கைகளை செவிசாய்க்கதவர்கள் மக்களால் நிராகரிக்கப்பட்ட இந்த அரசியல்வாதிகளுடன் தொடர்புபட்டவர்கள் ஏற்படுத்திய விசமத்தனமானதாக பார்கின்றோம்.

உண்மையில் ஆர்ப்பாட்டம் ஊடாகத்தான் தீர்வுகளை பெற்றுகொள்ள வேண்டும் என்ற தேவை இல்லை நேரடியாக நீங்கள் பிரதேச செயலாளரிடம் கோரிக்கைகளை முன்வைத்தால் நாங்கள் நடவடிக்கை எடுப்போம் அதுவும் உங்களுக்கு செயல்படுத்த முடியவில்லை என்றால் அரசாங்க அதிபர் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ள முடியும் அதுவும் முடியவில்லை என்றால் என்னை நேரடியாக தொடர்பு கொள்ளுங்கள் அரசாங்கம் என்ற ரீதியில் நான் உரிய நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

# மட்டக்களப்பில் தேடப்பட்ட காரணத்தால் வெளிநாட்டுக்கு தப்பி ஓடி திரும்பி வந்த பிள்ளையானின் சகாவை காலையில் கைது செய்து மாலையில் விடுவித்த சிஐடி



சிஜடி யினரால் தேடப்பட்டு வந்த நிலையில் வெளிநாட்டிற்கு நாட்டிற்கு தப்பி ஓடி தலைமறைவாகி இருந்து விட்டு மீண்டும் நாட்டிற்கு திரும்பி வந்து நான்கு நாளின் பின்னர் வீட்டில் வைத்து 17ம் திகதி புதன்கிழமை காலையில் கொழும்பில் இருந்து சென்ற குற்ற விசாரணைப் பிரிவு பொலிசாரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் சென்ற பிள்ளையானின் சகாவான அஜித் என்பவரை மாலையில் விசாரணையின் பின்னர் சிஜடி யினர் விடுவித்துள்ளனர்.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடந்த 2006 டிசம்பர் 15ம் திகதி கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சி.சந்திரகாந்தன் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவு (சிஜடி) யினர் மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலயத்தில் வைத்து ஏப்பிரல் 8ம் திகதி கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் வைக்கப்பட்டிருக்கும் பிள்ளையானிடம் மேற்கொண்டுவரும் விசாரணையின் அடிப்படையில் அந்த கட்சியை சார்ந்தவர்கள் மற்றும் பிள்ளையானின் சகாக்கள் பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணை இடம்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் பிள்ளையான் சகாவான அஜித் என அழைக்கப்படும் கிருஷ்ணபிள்ளை சுமன் என்பவரை சம்பவ தினமான காலையில் அவரது கொண்டையன் கேணியில் உள்ள வீட்டிற்கு கொழும்பில் இருந்து சென்ற சிஜடியினர் அவரை கைது செய்து விசாரணைக்காக அழைத்து சென்று விசாரணையின் பின்னர் மாலையில் விடுவித்துள்ளனர்.

கனடிய செய்திகள் Canadian News

# Ontario's MPP Logan Kanapathi spoke about 'Ditwah' cyclone and recent disaster, which distroyed Island of Sri Lanka, during his Mmember's time, at Queens Park

# இலங்கைத் தீவை தாக்கி அழித்த "டித்வா" புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகியவை தொடர்பாக ஒன்றாரியோ பாராளுமன்றத்தில் உணர்வுபூர்வமாக விளக்கமளித்த எம்பிபி லோகன் கணபதி!



Speaker,

I rise today with a heavy heart to speak about the deadliest cyclone – Ditwah, which destroyed the island of Sri Lanka on November 28th, leaving behind unimaginable loss.

This is even worse than the 2004 tsunami – more than 600 people have died, 190 remain missing, over 500,000 families have been displaced, and more than 1.7 million have been affected.

The Central and up-Country regions, especially Kandy, Nuwara-Eliya, and Badulla—were hit the hardest, with entire villages lost to landslides.

Severe flooding also affected places like Puttalam, Gampaha, Mannar, Mullaitivu, and more leaving communities isolated and homes destroyed.

Speaker, More than 400,000 people in Ontario have family in Sri Lanka, and many are deeply concerned about the safety and well-being of their loved ones, including my riding of Markham - Thornhill. The resilience of the people will help them heal and emerge stronger than ever on this beautiful island in the Indian Ocean.

At this time of great suffering, I urge everyone to stand together in support of Sri Lanka as people begin rebuilding their lives. Dreams will live, and hope will rise again.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

நவம்பர் 28 ஆம் திகதி இலங்கைத் தீவை அழித்து, நினைத்துப் பார்க்க முடியாத பெரும் இழப்பை ஏற்படுத்திய, மிகவும் கொடிய சூறாவளியான டிட்வாவைப் பற்றிப் பேசுவதற்காக இன்று நான் கனத்த இதயத்துடன் இந்த சபையில் எழுந்து நிற்கின்றேன்.

இது 2004 இல் நடைபெற்ற சுனாமியை விட மோசமானது என்பதைக் குறிப்பிடுவதோடு. இதுவரையில் 600க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர், 190 பேர் காணாமல் போயுள்ளனர். 500,000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. மேலும் 1.7 மில்லியனுக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலையும் பகிர்ந்து கொள்கின்றேன்.

இலங்கையின் மத்திய, மலைநாட்டுப் பகுதிகள், குறிப்பாக கண்டி, நுவரெலியா, பதுளை போன்ற பல மலைப்பகுதிகள் நிலச்சரிவுகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. நிலச்சரிவுகளால் சில கிராமங்கள் முற்றாகவே புதையுண்டு போயுள்ளன.

பெரு வெள்ளத்தால் புத்தளம், கம்பஹா, மன்னார், முல்லைத்தீவு போன்ற இடங்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டன. இவ்விடங்களில் அநேகமான மக்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஒன்ராறியோவில் வாழும் 400,000 க்கும் மேற்பட்ட இலங்கை மக்களின் உறவினர் இலங்கையில் வாழ்கின்றனர். இங்குள்ள பலர் தங்கள் அன்புக்குரியவர்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளனர். இவர்களுள் மார்க்கம்-தோர்ன்ஹில் பகுதியில் வாழும் மக்களும் அடங்குவர் என்பதையும் நான்குறிப்பிடவிரும்புகின்றேன்.

இந்தியப் பெருங்கடலில் உள்ள இந்த அழகான தீவில் மக்களின் மீள் எழுச்சியானது, அவர்கள் நலம் பெற்று முன்னெப்போதையும் விட வலுவாக வெளிப்பட உதவும்.

பெரும் துன்பம் தொடர்கின்ற இந்த நேரத்தில், மக்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப முனையும் இவ்வேளையில் இலங்கைக்கு ஆதரவாக அனைவரும் ஒன்றிணைந்து நிற்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

கனவுகள் வாழும், நம்பிக்கை மீண்டும் மலரும்.

நன்றி!

கனடிய செய்திகள் Canadian News

# Canada Provides Humanitarian Assistance in Response to Cyclone and Flooding in Sri Lanka

# இலங்கையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளப் பெருக்கு பாதிப்புக்குக் கனடிய அரசு வழங்கிய மனிதாபிமான உதவிகள்

Cyclone Ditwah has caused unimaginable loss, leaving many families and communities in Sri Lanka facing devastation and uncertainty. Canada stands with those impacted and will continue to provide humanitarian aid and support to help communities recover and rebuild.

Yesterday, the Honourable Randeep Sarai, Secretary of State for International Development, announced more than $2 million in funding for humanitarian assistance to support emergency relief efforts in Sri Lanka.

The funding is allocated as follows: $1.4 million to the World Food Programme (WFP) to provide immediate access to food for affected households.

$350,000 to World Vision Canada, a member of the Humanitarian Coalition, to provide relief items and emergency shelters, along with water, sanitation and hygiene services, through the Canadian Humanitarian Assistance Fund.

$215,000 to support the Sri Lanka Red Cross's ongoing relief operations through the Emergency Disaster Assistance Fund,, which is administered by the Canadian Red Cross.



Nearly $70,000 provided through the Canada Fund for Local Initiatives to deliver emergency relief.

Canada continues to monitor the situation and remains in close contact with experienced partners to assess and respond to evolving needs.

-----------------------------------------

அண்மையில் இலங்கையில் அழிவுகளை ஏற்படுத்தி மக்களுக்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்திய டித்வா புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகியவை நினைத்துப்பார்க்கமுடியாத இழப்பை ஏற்படுத்தி, இலங்கையில் பல குடும்பங்களுக்கும், சமூகங்களுக்கும் பேரழிவையும், நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. கனடிய அரசாங்கம் பாதிக்கப் பட்டோருக்கு ஆதரவாக இருந்து, மனிதாபிமான உதவியைத் தொடர்ந்து வழங்கி, சமூகங்களின் மீட்சிக்கும், அவை மீளக்கட்டியெழுப்பப்படுவதற்கும் உதவியளிக்கும்.

இலங்கையில் அவசர உதவி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இரண்டு மில்லியன் டொலரிலும் அதிகமான மனிதாபிமான நிதி உதவியை வழங்குவதாக கனடாவின் ராஜாங்க செயலாளர் (சர்வதேச அபிவிருத்தி) கௌரவ ரண்டீப் சறாய் (Randeep Sarai) அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் பின்வரும் முறையில் நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உடனடியாக உணவைப் பெறுவதற்காக உலக உணவுத் திட்டத்திற்கு 4 மில்லியன் டொலர் வழங்கப்படுகிறது.

மனிதாபிமான கூட்டிணைவின் ஓர் உறுப்பு அமைப்பான World Vision Canada என்னும் அமைப்பிற்க்கு, கனடா மனிதாபிமான உதவி நிதியத்தின் ஊடாக, உதவிப் பொருட்கள், அவசர தங்குமிடம் ஆகியவற்றையும், நீர், தூய்மைப்படுத்தல் மற்றும் சுகாதாரம் ஆகிய சேவைகளை வழங்குவதற்காகவும் 350,000 டொலர் வழங்கப்படுகிறது.

கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தால் முகாமைப்படுத்தப்படும் பேரிடர் உதவி அவசர நிதியத்தின் ஊடாக, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தற்போதைய உதவி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக 215,000 டொலர் வழங்கப்படுகிறது.

அவசர உதவியை வழங்குவதற்காக, உள்ளூர் முன்முயற்சிகளுக்கான கனேடிய நிதியத்தின் ஊடாக ஏறத்தாழ 70,000 டொலர் வழங்கப்படுகிறது.

மேலும் கனடிய அரசாங்கம் நிலைமையைத் தொடர்ந்து கண்காணிப்பதுடன், மாறும் தேவைகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக அனுபவமுள்ள பங்காளிகளுடன் நெருக்கமான தொடர்பைப் பேணுகிறது. என்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பெற்றுள்ளது.


## Thana Insurance Inc

### T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

### PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

### NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

### 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker




THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100%
ONLINE SERVICES,24/7."

# தமிழ்ப் பெரும் பரப்பை நோக்கிச் செல்லும் ஈழத்துப் பாடகர்கள்



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**சி**ல மாதங்களுக்கு முன் கேரளாவை சேர்ந்த வேடனின் Rap - ரப் பாடல்கள் சமூக வலைத்தளங்களில் பரவலாகப் பரவின. இப்பொழுது வாகீசனின் பாடல். வேடன் யாழ்ப்பாணத்து தாய்க்கும் மலையாளத்து தகப்பனுக்கும் பிறந்தவர். வாகீசன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இருவருமே குறுகியகால இடைவெளிக்குள் ரப் பாடல்களால் லட்சக்கணக்கானவர்களைக் கவர்ந்திருக்கிறார்கள்.

வேடன் 2020ல் இருந்து பாடுகிறார். அவர் வாகீசனிடம் இருந்து வேறுபடும் இடங்களில் ஒன்று, அவர் அதிகம் ஒடுக்கப்படும் சமூகங்களின், மக்களின் குரலாக ஒலிப்பதுதான். அவருடைய முதலாவது முயற்சி "குரலவற்றவர்களின் குரல்" என்ற தலைப்பின் கீழ்தான் வெளிவந்தது. அவர் தமிழர்களின் அரசியலில் தொடங்கி சிரியா, பாலஸ்தீனம் என்று உலகளாவிய அரசியலைப் பேசும் பாடல்களைப் பாடியுள்ளார். அவருடைய முக்கியத்துவமே அவ்வாறான போராடும் மக்களின் குரலாக ஒலிப்பதுதான். கரிய தேகம்; சீவப்படாத தலைமுடி; கழுத்தில் பெரிய உலோக மாலை; அண்மை ஆண்டுகளில் அவர் மேல் சட்டை இல்லாமலேயே மேடைகளில் காணப்படுகிறார். தனது உடல் மொழி, பாடல் வரிகள், உச்சரிப்பு போன்ற எல்லாவற்றிலும் அவர் தன்னை ஒரு கட்டுடைப்பாளனாக ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக வெளிக்காட்டுகிறார்.

எனினும் அவர் மீது பாலியல் வகைப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்டு. அவரால் பாதிக்கப்பட்டதாக கூறி பெண்கள் சிலர் நீதிமன்றங்களை நாடியிருந்தார்கள். அவை தமது புகழை மங்கச் செய்வதற்காக சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் என்று வேடன் தரப்பு கூறுகிறது.

வாகீசன் வேடனை விடவும் வயது குறைந்தவர். எங்கே வேடனிடமிருந்து வித்தியாசப்படுகிறார் என்றால், அவர் நேரடியாக புரட்சிகரமான வரிகளை இசைப்பதில்லை. ஜனரஞ்சகமான விடயங்களைத்தான் பாடுகிறார். ஆனால் அதிகம் பிரபல்யமடைந்த அவருடைய முருகன் பாடல் "காக்கும் வடிவேல்" முருக பகுதி பாடல் மட்டுமல்ல அங்கே அரசியல் உண்டு. அந்தப் பாடலுக்கு மதப்பரிமாணம் மட்டும் இல்லை. அரசியல் பரிமாணமும் உண்டு. அங்கே முருகன் மீட்பின் கடவுளாக, போராடும் மக்களின் தலைவனாக, போராடி தனக்கென்று ஒரு ராஜ்ஜியத்தை கட்டமைத்த தலைவனாகக் காட்டப்படுகிறார். அதில் மறைமுகமாக அரசியல் உண்டு. வேடனைப்போல வாகீசன் வெளிப்படையாக, நேரடியாக அரசியலைப் பாட முடியாத அரசியல் சூழலுக்குள் வாழ்பவர்.

வாகீசனின் முருகன் பாடலில் பாரம்பரிய இசைக் கூறுகளும் உண்டு. அது ஒரு ஹைபிரிட் பாடல். ரப் பாடலாகவும் இருக்கிறது. அதேசமயம் சாஸ்திரிய சங்கீதத்தின் கூறுகளும் உண்டு. அதன் கலப்பு வடிவம்தான் அதற்குள்ள கவர்ச்சி. வாகீசனைத் தூக்கிய பாடல் அது. அந்தப் பாடலில் உள்ள ஹைபிரிட்தனம்தான் அந்தப் பாடலை பரவலாக்கியது. இப்பொழுதும் அந்தப் பாடலுக்கு ஆடும் பெரும்பாலான தென்னிந்திய நடனக் கலைஞர்கள் அப்பாடலில் உள்ள மரபு இசை வகைப்பட்ட பகுதிக்குத்தான் ஆடுகிறார்கள்.





ரப் இசைக்கு அல்ல.

ஒரு சமையல் நிகழ்ச்சியின் ஊடாக அதிகம் பிரபல்யமான அவருடைய தனித்துவம் எதுவென்றால், அசல் யாழ்ப்பாணத்து தமிழில் அவர் கதைப்பது. அதில் ஒருவித அப்பாவித்தனமான ஆர்வம் இருக்கும். அதேசமயம் வேரை விட்டுக் கொடுக்காத தனித்துவமும் இருக்கும். தமிழ்நாட்டில் வசிக்கும் அல்லது தமிழ்நாட்டுக்கு அடிக்கடி சென்றுவரும் ஈழத் தமிழர்கள் பெரும்பாலும் தமிழகத்தில் உரையாடும்போது அல்லது தமிழகத்தவரோடு உரையாடும்போது ஒரு தமிழ்நாட்டுக்காரரை போலவே பெரும்பாலும் உரையாடுவார்கள். முதலாவதாக தங்களுடைய தமிழ் அவர்களுக்கு விளங்க வேண்டும் என்ற கரிசனை. இரண்டாவதாக தன்னுடைய ஈழத்தமிழ் அடையாளம் காரணமாக வரக்கூடிய பிரச்சினைகளை தவிர்க்கும் தற்காப்பு உத்தி போன்ற பல காரணங்களினாலும் அவ்வாறு தமிழ்நாட்டு தமிழைக் கதைப்பதுண்டு.

ஆனால் வாகீசன் ஒரு ஜனரஞ்சக மேடையில் யாழ்ப்பாணத்து தமிழை பேசுகிறார். அந்த தமிழில் எழுதப்பட்ட வரிகளை இசைக்கிறார். அவருக்கு கிடைக்கும் பிரபல்யத்துக்கு அவருடைய தமிழும் ஒரு காரணம். அதைவிட முக்கிய காரணம் அவரைத் தூக்கிய பாடல் ஒரு முருக பக்தி பாடலாக இருப்பது. அதில் அரசியல் வாடையும் இருப்பது. அந்தப் பாடலுக்குள்ள மதப் பரிமாணமும் அது திடீரென்று பெற்ற எழுச்சிக்கும் பிரபல்யத்துக்கும் ஒரு காரணம். அதற்கு இந்தியாவின் இப்போதுள்ள அரசியல் சூழல் மிகவும் அனுகூலமானது.

முருகப் பெருமானை ரப் இசைக்குள் ஏற்கனவே கொண்டு வந்து விட்டார்கள். அருணகிரிநாதர் பாடிய திருப்புகழில் அவ்வாறு ரப் சாயல் உண்டு. அதற்கும் முன்னரே தமிழ் பக்தி இலக்கியத்தில் ஆடுவதற்கான தாளலயம் உண்டு. பக்தி இயக்கங்கள் பெரும்பாலும் ஆடல் பாடலுக்குரியவை. பக்தி முத்தினால் ஆடல் வரும். அது எல்லா மதத்துக்கும் பொருந்தும். பரமஹம்சராக போற்றப்பட்ட ராமகிருஷ்ணரில் தொடங்கி, விமர்சனத்திற்கு உள்ளாகிய ஜக்கி வாசுதேவ், நித்தியானந்தா போன்றவர்களும் அவ்வாறு ஆடக் காண்கிறோம்.

வாகீசனுக்கு முன்னரே சுசீலா ராமன் என்ற பெண் முருக பக்திப் பாடல்களை ஆடலுக்கு ஏற்ப மீள உருவாக்கிப் பாடியிருக்கிறார். சுசீலா ராமன் இந்திய வேரிலிருந்து வந்த பிரதானிய இசை அமைப்பாளர். பல்வேறு இசைப் பாரம்பரியங்களையும் கலந்து பரிசோதனை செய்தவர். ஏற்கனவே உள்ள முருக பக்தி பாடல்களை துள்ளிசையாக ரீமேக் செய்தவர். அவரும் தன் பாடலுக்கு ஒத்திசைவான கோலத்தோடு மேடையில் தோன்றுவார். அடங்காத சுருள் முடி. எப்பொழுதும் ஆடத் தயாரான நெகிழும் உடல். சுசீலா மேடையில் பரவசமாகி தன்னை மறந்து துள்ளிக்குதித்துப் பாடுவார். அவருடைய பாடல்கள் இப்பொழுது நமது உள்ளூர் கோவில்களில் ஒலிக்க விடப்படுகின்றன. கோவில் மேடைகளிலும் ஏனைய இசை மேடைகளிலும் நமது உள்ளூர் பாடகர்கள் அதைப் பாடக் கேட்கலாம். புதிய தொழில்நுட்பமும் அந்தத் தொழில்நுட்பத்தின் கைதியாக உள்ள புதிய தலைமுறையும் ரசனைகளிலும் பாடல்களிலும் ஏன் பக்தியை வெளிப்படுத்தும் விதத்திலும் மாற்றத்தை விரும்புகின்றது.

இது ரசனை மாற்றத்தை, புதிய தொழில்நுட்ப வருகைகளால் ஏற்பட்டிருக்கும் லயமாற்றத்தை காட்டுவது. ஒரு தலைமுறை பக்திப் பாடல்களையும் ரப் இசையில் கேட்க விரும்புகிறது. அதே சமயம் தமிழ்நாட்டில் ஈழத்து உச்சரிப்பில் ரப் பாடலைக் கேட்கும் ரசிகர்களின் தொகை அதிகரிக்கின்றது.

ஏற்கனவே "சரிகமப" நிகழ்ச்சியில் ஈழத்துப் பாடகர்கள் பிரகாசிக்க தொடங்கி விட்டார்கள். அதில் வணிக உள்நோக்கங்கள் இருக்கலாம். ஆனாலும் பாக்கு நீரிணையின் இரண்டு பக்கமும் உள்ள இரண்டு தமிழ்ச் சமூகங்களுக்கும் இடையிலான பிணைப்பு கடந்த 16 ஆண்டுகளாக அதிகம் சோதனைக்கு உள்ளாகியிருக்கும் ஓர் அரசியல் பின்புலத்தில், ஈழத்துப் பாடகர்கள் தமிழக மேடைகளை நோக்கிச் செல்வது பிணைப்புகளைப் பலப்படுத்தும். சரிகமப மேடை என்பது அதிகபட்சம் ஜனரஞ்சக வணிக சினிமாவின் நீட்சியும் அகட்சியுந்தான். அங்கே மரபுகளை உடைத்துக் கொண்டு வெளியே வருவது குறைவு. ஆனால் ரப் இசை எப்பொழுதும் மரபுகளை உடைப்பதற்கான அதிகரித்த வாய்ப்புகளைக் கொண்டிருக்கிறது.

அதன் தொடக்கமே புரட்சிகரமானது. மேற்கில் அது எதிர்ப்பின் வடிவமாகத்தான் எழுச்சி பெற்றது. பாதிக்கப்பட்டவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் நசுக்கப்பட்டவர்கள் தங்கள் குரலை வெளிக்காட்டும் இசை வடிவமாக அது மேலெழுந்தது. அங்கே இசை அல்லது பாடல் அல்லது பாடல் வரிகள் எதிர்ப்பின் கருவிகளாக மேல் எழுகின்றன.

ஈழத் தமிழ் வேரில் பிறந்த வேடனும் வாகீசனும் இந்திய உபகண்டப் பரப்பை நோக்கி, பெருந் தமிழ்ப் பரப்பை நோக்கிப் பாடுகிறார்கள். சரிகமப மேடையில் ஈழத்துப் பாடகர்கள் பாடுகிறார்கள். கடந்த 16 ஆண்டுகளாக மெலிந்து போயிருக்கும் தமிழக-ஈழப் பிணைப்புக்களை மீளக்கட்டி எழுப்புவதற்கான நம்பிக்கைகளைப் புதுப்பிக்கிறார்கள்.

---

## வீணாவின் கவிக்கணை

எத்தனை சோதனை வந்தாலும்,
திடமாய் நிற்கும் மனம் வேண்டும்,
எத்தனை சங்கடங்கள் வந்தாலும்
அதை ஏற்றுக்கொள்ளும்
பக்குவம் வேண்டும்,
சொல்லை முள்ளாய் குத்தினாலும்
அதை தட்டிவிட்டு நடக்கும்
துணிச்சல் வேண்டும்,
எவ்வளவு உயரப்பறந்தாலும்
அடுத்தவரை மதிக்கும்
குணம் வேண்டும் !

கனடிய செய்திகள்
Canadian News

## Toronto's Royal LePage Ignite Realty Brokerage hosts it's 9th Annual Awards Night-2025 as a Colorful Event

# ரொறன்ரோவில் இயங்கிவரும் Royal Leapage Ignite Realty Brokerage நிறுவனம் நடத்திய சிறப்பான 9வது ஆண்டு விற்பனை விருதுகள் வழங்கும் வைபவம்



ரொறன்ரோ பிராந்தியத்தில் வெற்றிகரமாக இயங்கிவரும் Royal LePage Ignite Realty Brokerage நிறுவனம் நடத்திய சிறப்பான 9வது ஆண்டு விற்பனை விருதுகள் வழங்கும் வைபவம் கடந்த 13ம் திகதி சனிக்கிழமையன்று ஸ்காபுறோவில் அமைந்துள்ள விழா மண்டபத்தில் சிறபபாக நடைபெற்றது.. இதற்காக ஏற்பாடுகளை நிறுவனத்தின் தலைவரும் விற்பனை முகவருமான சுகன் சிவராஜா தனது சகோதரர்கள் மற்றும் பணியாளர்கள் மற்றும் தொண்டர்கள் சகிதம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



சிறப்பு விருந்தினர்களாக அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஹரி ஆனந்தசங்கரி மற்றும் நகரசபை உறுப்பினர் நீதன் சண்முகராஜா ஆகியோர் அழைக்கப்பெற்றிருந்தனர்.

நூற்றுக்கணக்கான விற்பனை முகவர்கள் அங்கு கூடியிருக்க அவர்களுள் பலர் தங்களுக்குரிய வெற்றியாளர் விருதுகளைப் பெற்றுக்கொண்டார்கள். இவ்வருடத்தின் அதி உயர் விற்பனை விருதுகளை இருவர்













பெற்றுக்கொண்டனர் அவர்களில் விற்பனை முகவர் போல் ஹல் அவர்கள் மற்றும் கமல் அமிர்தலிங்கம் ஆகியோர் வெவ்வேறு பிரிவுகளில் அதி உயர் விற்பனை விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

அத்துடன் சகோதரர்களான சுகன் சிவராஜா-சிவகுமார் சிவராஜா-உதயன் சிவராஜா-ராஜ் சிவராஜா ஆகியோர் கூட்டாக இணைந்த வகையில் உயர் விற்பனை முகவர்களுக்கான விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். இன்னும் பலர் சிறந்த விற்பனை முகவர்களுக்கான விருதுகளைப் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

**மன்னார் நிருபர்**

# அகில இலங்கை கம்பன் கழகத்தின் நிதி உதவியில் மாந்தை மேற்கில் பாதிக்கப்பட்ட நூறு குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பெற்றன

(15-12-2025)

அகில இலங்கை கம்பன் கழகத்தின் நிதி உதவியில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் 15ம் திகதி அன்றைய தினம் திங்கட்கிழமை மாந்தை மேற்கில் தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகள் வழங்கி வைத்துள்ளார்.


மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் பிரேம் குமார் தலைமையில் இடம்பெற்றது.

புயல் மற்றும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மாந்தை மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட அடம்பன் வடக்கு, வாமதேவ புரம், புளியங்குளம் மற்றும் வேப்பங்குளம் ஆகிய கிராமங்களில் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு பொதிகள் அகில இலங்கை கம்பன் கழகத்தின் உதவியுடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் பிரேம் குமார் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்துள்ளனர்.



**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



# ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை சாத்தியமா?

**“இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கல்வித்தகுதி அவசியமா இல்லையா என்ற கேள்வி நீண்டகாலமாக இருந்துவரும் நிலையில் இலங்கை அரசியல்வாதிகளில் கல்வி அறிவு உள்ளவரும் இல்லாதவரும் ஒன்றுதான் என்பதனை நிரூபிக்கும் விடயமே இந்த ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணை கோரிக்கை”**

கே.பாலா -

இலங்கையில் எந்தவொரு அடிப்படைத் தகுதியும் தேவைப்படாத ஒரு தொழில் அதுவும் கௌரவம், அதிகாரம், சிறப்புரிமைகள், செல்வாக்கு ,இலாபம் நிறைந்த தொழில் என்றால் தற்போதைய நிலையில் அரசியலையே குறிப்பிட முடியும். மேற்குலக நாடுகளில் “அரசியல்” என்பதனை மக்களுக்கான ஒரு சேவையாக அந்தந்த நாட்டு அரசியல்வாதிகள் முன்னெடுத்து வரும் நிலையில் ஆசிய நாடுகளில் குறிப்பாக இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலேயே “அரசியல்” என்பதனை எந்தவொரு விடயத்திலும் அடிப்படை அறிவு இல்லாதவர்கள் கூட ஒரு இலாபம் கொழிக்கும் “தொழிலாக” பயன்படுத்தி வருகின்றனர்.

இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களாவதற்கு குறிப்பிட்டதொரு “கல்வித்தகுதி” யை கட்டாயமாக்க வேண்டுமென்ற யோசனை முன்னர் ஒரு தடவை பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட போது அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. அத்துடன் பாராளுமன்றத்தில் இடம்பெறும் வாய் மூல விடைக்கான வினா நேரத்தில் கூட ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் கல்வித்தகுதி தொடர்பில் இன்னொரு பாராளுமன்ற உறுப்பினர் கேள்வி எழுப்பினால் கூட பதில் வழங்கப்படுவதில்லை. அதுமட்டுமல்ல பாராளுமன்றத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளத்தில் கூட ஒரு பாராளுமன்ற உறுப்பினர் விரும்பினால் மட்டுமே தனது விபரப் பக்கத்தில் கல்வித்தகுதியை பதிவிடும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல்வாதிகளுக்கு கல்வித்தகுதி அவசியமில்லை என்பதற்கு கூறப்படும் முக்கிய காரணம் “மக்கள் சேவைக்கு கல்வித்தகுதி அவசியமில்லை மக்களுக்கு உதவும் மனம் இருந்தால் போதும்” என்பதாகவே உள்ளது. இது ஏற்கக்கூட்டிய ஒரு காரணமாகவும் உள்ளது. ஏனெனில் கல்வித் தகுதியில்லாத அரசியல் வாதிகள் மக்களுக்கு செய்யும் சேவைகள், உதவிகளில் அரைப்பங்கினைக்கூட பட்டம், பதவிகள் என பெரும் கல்வித் தகுதிகளுடன் இருக்கும் அரசியல்வாதிகள் செய்வதில்லை. அதுமட்டுமன்றி “கல்விமான்கள்” என்னும் அடையாளத்துடன் இருக்கும் இவ்வாறான சில அரசியல்வாதிகள் செய்யும் வேலைகள், வெளியிடும் கருத்துக்கள் அடி முட்டாள்தனமாகவே இருக்கின்றன. அதற்கான ஒரு உதாரண சம்பவத்தைத் தான் இங்கு பார்க்கப் போகின்றோம்.

“பேரிடர் குறித்து முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு தகவல் கிடைத்தும் அனர்த்தங்களால் ஏற்பட்ட இழப்புகளை கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளது. இது விடயத்தில் தனது இயலாமை மற்றும் கவனயீனத்தை மூடி மறைப்பதற்கு அரசாங்கம் முயற்சித்து வருகின்றது. அத்துடன், அரசாங்க பலத்தை பயன்படுத்தி தமது தரப்பில் இழைக்கப்பட்ட தவறை மறைப்பதற்குரிய நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுகின்றது. எனவே, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு எதிராக குற்றப் பிரேரணையொன்றை முன்வைக்குமாறு பிரதான எதிர்க்கட்சியிடம் கோருகின்றோம். அவ்வாறு கொண்டுவந்தால் எங்கு தவறிழைக்கப்பட்டது என்பது உட்பட அனைத்து தகவல்களும் தெரியவரும். தேசிய மக்கள் சக்தியில் மனசாட்சியின் பிரகாரம் செயல்படும் எம்.பிக்களும் அதனை ஆதரிக்கக்கூடும். அப்போது அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமும் ஆட்டம் காணும்” என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன (மொட்டு கட்சி) தலைமையகத்தில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது அக்கட்சியின் பொது செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டிருந்தார்.

இந்த “ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்காவுக்கு எதிரான குற்றப்பிரேரணை” என்ற பொதுஜன பெரமுன கட்சியின் பொது செயலாளரின் கோரிக்கையும் அறிவிப்பும்தான் இலங்கை அரசியல்வாதிகளுக்கு கல்வித் தகுதி இருந்தாலும் பிரயோசனமில்லை என்ற கூற்றுக்கு வலுச்சேர்கின்றது. ஏனெனில் சாகர காரியவசம் ஒன்பதாவது பாராளுமன்றத்தில் 2020-08-10 முதல் 2024-09-24 வரை பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அனுபவத்தைக் கொண்டதுடன் ஒரு பிரபல சட்டத்தரணியுமாவார், அவ்வாறானவர் ஒரு ஊடக சந்திப்பில் முன்வைத்துள்ள இந்த அடிப்படையறிவற்ற, முட்டாள்தனமான “ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணை” கோரிக்கைதான் இன்று நகைப்பிற்கும் கேலிக்கும் உள்ளாகியுள்ளது.

இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கல்வித்தகுதி அவசியமா இல்லையா என்ற கேள்வி நீண்டகாலமாக இருந்துவரும் நிலையில் ஒரு சட்டத்தரணி ஒரு பிரபல கட்சியின் பொது செயலாளர் என்ற கல்வித் தகுதி, பட்டம், பதவியுடன் இருக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான இந்த சாகர காரியவசம்,ஜனாதிபதி ஒருவர் மீது எந்த எந்த அடிப்படையில் குற்றப்பிரேரணை கொண்டு வர முடியும் என்ற அடிப்படை அறிவு கூட இல்லாது “டித்வா புயலுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லை” என்ற குற்றச்சாட் டை முன்வைத்து ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவர வேண்டுமென ஒரு ஊடகவியலாளர் மாநாட்டை நடத்திக் கூறியுள்ளார்.

இலங்கையில் 1978 ஆம் ஆண்டில்தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை உள்ளடக்கிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இன்றளவிலும் அந்த அரசியலமைப்பே அமுலில் உள்ளது. இதுவரையில் 22 தடவைகள் அரசியலமைப்பு மறுசீரமைக்கப்பட்டிருந்தாலும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை முன்வைப்பதற்கான நடைமுறையில் எந்தவொரு திருத்தமும் கொண்டு. வரப்படவில்லை. அந்த வகையில் ஒரு ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட வேண்டுமானால் அதற்கான சில நியமங்கள், விதி, முறைகள், நிலையியல் கட்டளைகள் உண்டு.

இலங்கை ஜனாதிபதிப் பதவி வெற்றிடமாகக் கூடிய சந்தர்ப்பங்கள் அரசியலமைப்பில் 38ஆவது உறுப்புரை 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன. 1-பதவிக்காலத்தில் இறத்தல், 2-தன் கைப்பட இராஜிநாமாவை சபாநாயகருக்கு சமர்ப்பித்தல், 3-இலங்கைப் பிரஜை என்ற அந்தஸ்தை இழத்தல், 4-பதவிக்காலம் தொடங்கி ஒரு மாதத்திற்குள் பதவி ஏற்காதுவிடல், 5-38 (2)ல் ஏதேனும் குற்றச்சாட்டின்படி பதவி நீக்கம் செய்யப்பட்டால், 6-130 (அ) உறுப்புரைப்படி ஜனாதிபதியின் தெரிவு பிழையானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால், மேற்குறித்த நிலைகளில் ஜனாதிபதிப் பதவி வெற்றிடமாகும், இதில் 38 (2)ல் ஏதேனும் குற்றச்சாட்டின்படி பதவி நீக்கம் செய்யப்பட்டால், என்ற ஷரத்தை பயன்படுத்தவே சாகர காரிய வசம் ஜனாதிபதி அநுரகுமாராவுக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டு வர வேண்டும் என்கின்றார்.

அந்த வகையில் பதவியில் உள்ள ஜனாதிபதி ஒருவர் உளரீதியான பாதிப்பு அல்லது உடல் அங்கவீனத்தால் ஜனாதிபதி பதவியை தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் இருந்தால், அரசியலமைப்பை வேண்டுமென்றே மீறியிருந்தால், தேசத் துரோக செயலில் ஈடுபட்டிருந்தால், இலஞ்சம் வாங்கியிருந்தால், அதிகார துஷ்பிரயோகம் செய்திருந்தால், துர்நடத்தையில் ஈடுபட்டிருந்தால், ஊழலில் ஈடுபட்டிருந்தால், சட்டத்தைமீறி ஒழுக்கமற்ற விதத்தில் நடந்திருந்தால், மேற்படி காரணிகளில் ஏதேனும் ஒரு விடயத்தை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளை முன்வைத்து, அது அல்லது அவை தொடர்பில் உயர்நீதிமன்றம் விசாரணை நடத்த வேண்டுமெனக் கோரி, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை சபாநாயகரிடம் சமர்ப்பிக்க முடியும்.

மேற்படி குற்றச் சாட்டுக்களில் ஏதாவது ஒன்றை முன்வைத்து குறித்த குற்றச்சாட்டுக்கள் எழுத்து மூலம் குறிக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்களில் 2/3 குறையாதோர் அதாவது 150 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குறையாதோரின் கையொப்பத்துடன் சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டும். இக்கையொப்பம் 2/3க்கு குறைவாக இருந்தால் குறித்த குற்றப் பிரேரணையை சபாநாயகரால் நிராகரிக்க முடியும். இருப்பினும் குறித்த குற்றப் பிரேரணைக்குப் பாராளுமன்ற உறுப்பினர்களில் 113 பேருக்கு மேல் கையொப்பமிடப்பட்டிருப்பின், நியாயங்கள் காணப்படுமிடத்து உயர்நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என சபாநாயகர் திருப்திப்பட்டு பாராளு மன்றத்தில் 2/ பெரும்பான்மையைப் பெற முடியுமென கருதினால் குறித்த குற்றப் பிரேரணையை பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சபாநாயகரால் சேர்க்க முடியும்.

குறித்த குற்றப் பிரேரணையை சபாநாயகர் ஏற்றுக்கொண்டால் 3 படிமுறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். 1. குறித்த பிரேரணை பாராளுமன்ற விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். விவாத முடிவில் நடத்தப்படும் வாக்கெடுப்பில் சமுகமளிக்காத உறுப்பினர் எண்ணிக்கை உட்பட 2/3 பெரும்பான்மை வாக்குகள் அதாவது 150 வாக்குகள் பெறப்படின் மேற்குறித்த குற்றப் பிரேரணை குறித்து விசாரணையை மேற்கொள்ளும்படி உயர்நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும். 2. உயர்நீதிமன்றம் குறித்த குற்றப் பிரேரணையை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும். இவ்விடத்தில் தான் குற்றவாளி அல்ல என நிரூபிக்கவும், தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என நிரூபிக்கவும் ஜ ஸ்ரீனாதிபதியால் அல்லது அவரின் சட்டத்தரணியால் சாட்சியமளிக்க யாப்பில் இடம் வழங்கப்பட்டுள்ளது. (129 (2) உறுப்புரைப்படி இந்த விசாரணை இரண்டு மாதங்களுக்குள் நிறைவு செய்யப்படல் வேண்டும்.) 3. ஜனாதிபதி மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் உண்மையானவை என உயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிக்கை (தீர்ப்பு) சமர்ப்பிக்கப்படும் இடத்து மீண்டும் பாராளுமன்றத்தில் சமுகமளிக்காத உறுப்பினர் உட்பட 2/3 பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஜ னாதிபதியைப் பதவி நீக்கம் செய்ய முடியும்.


எனவே, “டித்வா” புயல் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் முன்கூட்டியே எச்சரித்ததாகவும், எனவே, பேரிடரால் ஏற்படும் இழப்பை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் மொட்டு கட்சி கூறிவருகின்றது. அதாவது இந்த விடயத்தை அக்கட்சி “அதிகார துஷ்பிரயோகமாக அல்லது தேசத் துரோக நடவடிக்கையாக கருதுகின்றது போலுள்ளது. அவ்வாறு குற்றச்சாட்டு இருந்தாலும் குற்றப் பிரேரணையை முன்வைப்பதற்கு 150 எம்.பிக்களின் கையொப்பம் அவசியம். ஆனால் ஒட்டுமொத்த எதிரணி வசம் 66 எம்.பிக்களே உள்ளனர். எனவே, குற்றப் பிரேரணையை கொண்டுவருவதற்குரிய ஆரம்பக்கட்ட வாய்ப்புகூட எதிரணிக்கு இல்லை. அப்படி இருக்கும்போது சட்டத்தரணியான சாகர காரியவசம் எந்த அறிவின் அடிப்படையில் குற்றப் பிரேரணை பற்றி பேசுகின்றார் என்பதே எழுந்துள்ள கேள்வி.

இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவந்தால் மனச்சாட்சி உள்ள தேசிய மக்கள் சக்தி எம்.பிக்கள் ஆதரவளிப்பார்கள் எனவும் சாகரகாரிய வசம் முட்டாள்தனமாக கூறுகின்றார் அந்த கட்டத்துக்கு செல்வதற்கு முதலில் குற்றப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும். அதனை சபாநாயகர் ஏற்க வேண்டும்.அதற்குரிய ஆரம்பகட்ட ஏற்பாடுகள்கூட இல்லை. அந்த வகையில் சாகர காரியவசத்தின் இந்த கருத்து “பல் இல்லாதவன் பக்கோடா சாப்பிட ஆசைப்படும் கதை”யாகவே உள்ளது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக 1991ஆம் ஆண்டில் இலங்கையின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கு எதிராக குற்றப்பிரேரணை ஒன்று கொண்டு வரையப்பட்டது. இக்குற்றப் பிரேரணையில் 116 பாராளுமன்ற உறுப்பினர்கள் (அரை வாசிக்கு மேல்) கையொப்பமிட்டிருந்தனர். சபாநாயகரினால் ஆரம்பத்தில் அக் குற்றப்பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டபோதிலும் பின்னர் கையொப்பமிட்டுள்ள உறுப்பினர்களின் கையொப்பங்கள் பிழையானவை என காரணம் காட்டப்பட்டதினால் அந்தக் குற்றப் பிரேரணை எடுத்துக் கொள்ளப்படவில்லை.

அதன் பின்னர் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டுவருவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முயற்சித்தபோதும் எதிரணி வசம் ஆதரவு இருந்தும் அதனை நிறைவேற்றுவதற்குரிய நடைமுறை கடினமானது என்பதால் இதிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தி பின்வாங்கியது. இவ்வாறான நிலையில் தான் கற்றறிந்தவரான சட்டத்தரணி சாகர காரியவசம் ““டித்வா புயலுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லை” என்ற குற்றச்சாட்டை முன்வைத்து ஜனாதிபதிக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவர வேண்டும்” என்ற முட்டாள்தனமான, அடிப்படை அறிவற்ற கருத்தை பொதுவெளியில் முன்வைத்து இலங்கை அரசியல்வாதிகளில் கல்வி அறிவு உள்ளவரும் இல்லாதவரும் ஒன்றுதான் என்பதனை நிரூபித்துள்ளார்.




UHCOSA
Est 1994
உரும்பிராய் பாடசாலைகளின்
பழைய மாணவர் சங்கம் -கனடா
Urumpirai Schools old students Association
presents
MATH & ENGLISH
EXAMS
JK - GRADE 8
$30 FOR BOTH
JANUARY 4, 2026
@ BABA BANQUET HALL
9:30 AM
Contact us:
416-720-8690
647-710-7816
urumpiraiyouth@gmail.com
Note

உங்கள் உடல் வலிகளிலிருந்தும் தசைப் பிடிப்பு காரணமான உபாதைகளிலிருந்தும்
தகுந்த சிகிச்சை மூலம் நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள எம்மை நாடுங்கள்...

**MiracleHealth**

ஸ்காபுறோ நகரில்
3000 Lawrence Ave. East, Scarborough, ON M1P 2V1
என்னும் விலாசத்தில் இயங்குகின்றது.
*( Scarborough General Hospital அருகில்)*

Meet Our Team



Physiotherapy • Massage Therapy • Counselling • Ayurvedic Therapy • Acupuncture • IV Nutrition Therapy





We are accepting new patients.

தமிழிலும் உரையாடும் வசதிகள் உள்ளன.

**Phone:**
**416.289.4444**



# உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?



## Legalize your basement now!

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



**Coverall Group Inc.**

416-706-8160 OR 416-893-3216



Carefirst Family Health Team

## Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24





# "பல்சுவை தமிழர் விழா"வாக இடம்பெற்ற கனடா உதயன் பத்திரிகையின் 29ஆவது ஆண்டு நிறைவு விழா

கனடா உதயன் பத்திரிகையின் 29 ஆவது ஆண்டு பல்சுவை கலை விழா டிசம்பர் 13ம் திகதி சனிக்கிழமை அன்று நடைபெற்றது. விழா குத்துவிளக்கேற்றலுடன் ஆரம்பமானது. கனடா கீதம். தமிழ்த் தாய் வாழ்த்துடன் அகவணக்கம் நிகழ்த்தப்பட்டது.

வரவேற்பு நடனம் வர்ணிகா துவாரகன் அவர்களால் ஆடப்பெற்றது. பிரதம விருந்தினராக தமிழ்மாமணி உலகசாதனையாளர் திரு. கந்தசாமி உயிரவன் அவர்கள் மொன்றியலில் இருந்து விழா ஏற்பாட்டாளர்களால் அழைக்கப்பெற்றிருந்தார்.

விழா நிகழ்ச்சிகளை அறிவிப்பாளர்கள் மதிசயன் மற்றும் சாலினி பிள்ளை ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள். அனைத்துலகத் தமிழ்ப் பேரவையின் தலைவர் "நிமால் விநாயகமூர்த்தி" அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

உதயனில் லோகேந்திரலிங்கம் அவர்களின் "கடின உழைப்புடன் சரியான தகவல் தெளிவாக நம்பகரமான செய்திகளையும் கட்டுரைகளையும் அவர் வாசகர்களுக்கு தந்து வருகின்றார் என்று தனது வாழ்த்துரையில் தெரிவித்தார்.

அடுத்து சந்தியாராகம் நிகழ்வில் முதல் இடத்தைப் பெற்ற "குகா சோமசுந்தரம்" அவர்கள், பிள்ளையார் சுழி போட்டு பாடலை அருமையாகப் பாடினார்.

அடுத்து அழைக்கப்பெற்ற அகணி சுரேஸ் அவர்கள்தனது வாழ்த்துரையில் லோகேந்திரலிங்கம் அவர்கள் பல ஊடகங்களின் ஆதரவாளர் படைப்பாளி மற்றும், உலக நாடுகள் முழுவதும் பயணித்து, தமிழ்ப்பணி ஆற்றுபவர், இவருக்கு உறுதுணையாக இவர் மனைவி பத்மலோசனி, மற்றும் அவர் குழந்தைகள் ஆகியோர் பக்க பலமாக இருந்து இந்த பத்திரிமை வெளிவர உதவுகின்றனர். மலேசியாவில் "நாவன்மை" என்னும் நிகழ்வை நிகழ்த்துகிறார் என வாழ்த்தினார்.

நடன ஆசிரியை தயாளினி அவர்களின் மாணவி சாதனா விழங்கிய நடனம் மிகவும் அருமையாக இருந்தது.

அடுத்து அழைக்கப்பெற்ற வரசித்தி விநாய ஆலய முதன்மைக் குருக்களான விஜய குமாரக் குருக்கள் அவர்கள் தன் வாழ்த்துரையில் இந்தியா இலங்கை மலேசியா கம்போடியா என உலக நாடுகள் எங்கும் சுற்றித் திரிந்து உதயன் பத்திரிகையின் ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள் தமிழ்ப்பணி ஆற்றுகிறார் என வாழ்த்தினார்.

ரொறன்ரோ நகர சபை உறுப்பினர் நீதன் சாண் வாழ்த்துரையில் "அச்சு ஊடகங்கள் முன்பு மாதிரி இல்லை என்ற நிலை இருந்தாலும் என்றாலும் தன் முயற்சியால் லோகேந்திரலிங்கம் அவர்கள் ஒவ்வொரு வாரமும் தன் கடின உழைப்புடன் இந்த பத்திரிகையைத் தருகிறார்" என்றார்.

அடுத்து "புலம்பெயர் நாடுகளில் தமிழ்க்கல்வி" எனும் தலைப்பில் அருமையான தூய தமிழில் உரையாற்றினார் அனுஸ் சுதாகரன். மூத்த மொழியான தமிழை தம் வீட்டில் பேசாதிருப்பதை எண்ணும்போது நா கூசுகிறது என்றும் எம் மக்களை சாடினார்.

பிரதம விருந்தினராக தமிழ்மாமணி உலகசாதனையாளர் திரு. கந்தசாமி உயிரவன் அவர்கள் தனக்குரிய பாராட்டுக்களை மேடையில் பெற்ற பின்னர் ஆற்றிய தனது உரையில், "இரண்டு விடயங்கள் நான் கூறுவேன் கனடா உதயனுக்கு நாலு வயதாக இருக்கும் போது அதன் ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள் என்னுடன் பழகத்தொடங்கி அன்று 29ம் ஆண்டு விழாவில் என்னை இவ்விழாவுக்கு அழைத்ததில் பெருமையடைகிறேன். நான் கனடா 2004ல் மொன்றியலில் "தமிழ்ச்சுடர்" விருது பெற்றதை ஒரு பக்கம் நிறைய எழுதினார். அவர் இங்குள்ளாரா? மொன்றியலில் உள்ளாரா? இலங்கையிலா? கம்போடியாவிலா என அறிய இயலாத அளவுக்கு வேகமாகச் சென்று செயலாற்றுவார். கனடா உதயன் என்பது சரியான பெயராகும். ரொரோன்றொ மொன்றியல், ஒட்டாவா கோண்வோல் என உதயன் பத்திரிகை எங்கும் விரிந்து பறக்கின்றது என்றார்.

உவகையுடன் தெரிவித்தார். உலகம் முழுவதும் தமிழ் பேசத்தெரியாத தமிழர்கள் இருப்பது போல், கனடாவில் அந்த நிலை வரக்கூடாது எனவும், தமிழர்கள் வடஎழுத்துக்களை நீக்கினால் தான் சுயமாக நாங்கள் வாழ்வோம் எனவும் கூறினார்.

இதனை அடுத்து ஒரு அருமையான நடனம் நடந்தேறியது. சக்தி நர்த்தனாலயா நடனப் பள்ளியின் நிறுவனரும் குருவுமாகிய ஜனனி ரவிசங்கர் அவர்களின் நெறியாள்கையில் அந்த நடனம் சிறப்பாக படைக்கப்பெற்றது. அது பலரின் கண்களைக் கசிய வைத்த ஒரு அற்புதப் படைப்பாக விளங்கியது என்றால் அது மிகையாகாது.

1981ம் ஆண்டு வைகாசி மாதம் 31ஆம் திகதி இரவில், 12.30 மணியளவில் சிங்களக் கயவர்களால், எரியூட்டப் பட்ட எம் அறிவுக் களஞ்சியமான "யாழ் நூலகம்" எரிந்து சாம்பலானதை நாட்டிய நாடகமாக அரங்கேற்றினர் குருவும் ஏனைய மாணவிகளும்.

முதலில் யாழ்ப்பாண நூலக வாசலில் வந்து வரிசையில் காத்திருப்பவர்கள் நூலகம் திறக்கப்பட்ட போது காலணிகளைக் கழற்றி வைத்து விட்டு ஆலயத்துள் நுழைவது போல் நூலகத்தினுள் நுழைகின்றனர். தமக்கு வேண்டிய நூல்களை எடுத்துப் படிக்கின்றனர். வீட்டுக்கு எடுத்துச் செல்கின்றனர்.



































கனடா என்றதும், மதிப்புக்குரிய பாலசுந்தரம் மதிப்புக்குரிய குரு அரவிந்தன் அகணி சுரேஸ், புட்பா கிறிட்டி என கனடாவை நினைவு படுத்துபவர்கள் பலர் இந்த விழாவில் கலந்து கொள்வது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கின்றது என்றும்

(தொடர்ச்சி 15 பக்கம்)



Wishing you a very
Merry Christmas
And happy new year
உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும்
ஆரோக்கியமானதும் வளமானதுமான கிறிஸ்துமஸ் மற்றும்
புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.
ONTARIO
Aris Babikian
MPP / DÉPUTÉ
SCARBOROUGH-AGINCOURT
Constituency Office:
207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6
Tel: 416-297-6568 Email: aris.babikianco@pc.ola.org

*(13 பக்கம் தொடர்ச்சி)*

ஆனால். அன்றிரவே முகமூடியணிந்த தென்னிலங்கைக் காடையர்கள் வந்து அந்த நூலகத்துக்கு எரிகுண்டுகளை எறிந்து திக்கிரையாக்கி விடுகின்றனர். மறு நாள் நூலகம் எரிந்த செய்தி யாழ்ப்பாணம் எங்கும் பரவிட பொதுமக்களும் வாசகர்களும் அலறித் துடித்து மனம் பதைபதைத்து அலறி அழும் காட்சி பார்வையாளர்களை நெஞ்சுருகிக் கசிய வைத்தது. இதற்காக ஏற்ற கவிதை ஒன்றை உதயன் லோகேந்திரலிங்கம் அவர்கள் எழுதிக் கொடுக பின்னணி குரல் கொடுத்து, மருத்துவர் போல் ஜோசப் அவர்கள் வாசித்தளித்தார்.

அருமையான கவிதை.

அத்துடன் கூடவே அன்றைய நடன நிகழ்வில் நடந்த சிறந்த கல்விமானாகிய 30 மொழிகளில் புலமை கொண்ட தாவீது அடிகளாரின் மரணம் பற்றிய விவரணத்தையும் கூறினார் மருத்துவர்போல் ஜோசப் அவர்கள்.

இந்நடனத்தில். பங்கெடுத்த நடன மணிகள் சிறுவர்கள் என அனைவரும் திறமையாக தமது பங்களிப்பை அளித்திருந்தனர்.

செல்விகள் நிவேதிகா தீபன் வைசாலி சிறிதரலிங்கம் ரேனாராஜ் சந்திரிகா தியானா ரவிசங்கர் கிரினா ரவிசங்கர் ஜொய்ஸ்னா இந்துநாதன் பவிஸ்னா இரட்ணசிங்கம் - ரெய்னி வித்யா ஆகியோர் தங்கள் நாட்டிய அர்ப்பணத்திற்கான சான்றிதழ்களை மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களிடமிருந்து பெற்றனர்.

அத்துடன் கவிதை நேரம் ஒன்று நிகழ்த்தப்பட்டது.

அதனை தலைமை தாங்கி நடத்தியவர் "பாவலர்". க. குமரகுரு அவர்கள். இவருடன் கவிதாயினி உமா மோகன் - கவிஞர் வீணைமைந்தன் சண்முகராஜா - கவிஞர் மயிலைக்கவி - கவிஞர் சந்திரமோகன் ஆகியோர் வேறுபட்ட தலைப்புகளில் - தத்தமது கவிதைகளை சமர்ப்பணம் செய்தார்கள்.

அடுத்து தமிழ் சமூக மையம் மற்றும் மாநாட்டு மண்டபம் தமிழர்க்கு மிகவும் அவசியம் என்றும் ஜனவரி 31ஆம் திகதிநிதி சேகரிக்கும் முயற்சிக்கு இறுதி நாள் எனவும் ஸ்காபுறோ தமிழ்ச் சமூக மையத்தின் சார்பில் திரு. கெங்காதரன் வினாயகமூர்த்தி வழகிய 10000 டாலர்கள் நிதியை பெற்றுக் கொள்வதற்காக வந்திருந்த சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள். தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஒவ்வொருவரும் 1000 டொலர்கள் கொடுங்கள். 400 டொலர்கள் வரி மீள் பெறும் பற்றுச்சீட்டு கிடைக்கும் அல்லது ஒரு குடும்பமாக 10000 டொலர்கள் வழங்கினார் அதற்கான வரிமிளப்பெறும் பற்றுச்சீட்டு வரும் என்றார்.

இன்று தருகிறேன் என்று சொல்லுங்கள். பின்னர் தாருங்கள். அல்லது சிறிது சிறிதாக் கொடுங்கள் என்றார். சிந்திப்போம். எமது அடுத்தடுத்த தலைமுறைகள் எம்மைச் சிந்திப்பார்கள் என்றும் அவர் சபையோரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அடுத்து அன்றீனா கங்காதரன் ஜஸ்மிதா கங்காதரன் ஆகிய சகோதரிகள் பாடிய "மல்லிகையே மல்லிகையே மாலையிடும் மன்னவன் யார் சொல்லு" பாடல் கேட்போரை மகிழவைத்தது.

பிரபல பாடகர் தனநாயகம் கனகரட்ணம் பாடிய "மருதமலை மாமணியே" பாடலும் சிறப்பாக இருந்தது.

அப்போது அவர் லோகேந்திரலிங்கம் அவர்களின் பெருந்தன்மை பற்றி ஒரு கருத்தைக் கூறினார். அதாவது, 2013ஆம் ஆண்டில் கனடாவின் தனது பல்சுவைக் கலைவிழாவிற்காக இவர் அழைத்த ஆச்சி மனோரமா அவர்களை தமது. நிறுவனத்து தொடக்கவிழாவுக்கு அழைத்த போது ஆச்சி மனோரமாவை இங்கு கொண்டு வர அதிக செலவு செய்ததிருப்பார் என்ற எண்ணத்தில் அதற்கென ஒரு தொகை பணத்தை தர வேண்டும் என்று தான் கேட்டபொழுது அதனை மறுத்ததுடன் நீங்கள் வளர்ந்தால் நாங்கள் வளர்ந்தது போன்றதே எனக் கூறியதை பெருமனதுடன் நினைவு கூர்ந்தார்.

அமைச்சர் ரேமண்ட் சோ மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்கள், திருவாளர்கள் லோகன் கணபதி, அரிஸ் பாபிகியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கூடவே வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்குமான பரிசில்களையும் வழங்கினார்கள். அவர்களுடன் சமூக சேவையாளர் சக்தி ஞானம்மா அவர்களும் மேடையில் அழைக்கப்பெற்று அவரும் பாராட்டுப் பத்திரங்களை வழங்கினார்.

நடன ஆசிரியை தனுஜா திருமாறன் அவர்களின் மாணவி அரியானா தனேந்திரனின் பரத நாட்டியம் அருமையாக இருந்தது.

பிரதம விருந்தினர் உரை இடம்பெற்ற பின்னர் அமைச்சர் கரி ஆனந்தசங்கரி அவர்களின் வாழ்த்துப் பத்திரம் வாசிக்கப்பெற்று உயிரவன் அவர்களுக்கு வழங்கப்பெற்றது. கூடவே ஒன்றாரியோ மாகாண அமைச்சர் ரேமன் சா அவர்களும் உதயன் பத்திரிகையின் 30 ஆண்டு கால வளர்ச்சி பற்றிக் கூறி அனைவரையும் வாழ்த்தினார்.

அடுத்து சுயனித்தா சுயந்தன் மற்றும் சந்தோஸ் குகன் ஆகியோர் இணைந்து பாடிய "தில்லான தில்லான" பாடல் சிறப்பாக இருந்தது. வியானிகா அருணோதயனின் "சகலலக பேபி, லுக்கு விடத் தோணலியா" பாடலும் அருமை. அடுத்துப் பாடிய சகானா இரங்கநாதனின் "நானே நானா யாரோ தானா" மிகவும் நன்றாக இருந்தது. நிலா கிருஷ்ணசூரியனின் "விழிகளில் ஒரு வானவில்" பாடலும் அருமையாக இருந்தது.

மாலையில் யாரோ... பாடலைப் பாடிய... குரல் வளமும் நன்றாகவே இருந்தது. வாழ்த்துகள் அனைவர்க்கும் பாராட்டுக்கள். அத்துடன் "சன்சீ" இசைக்குழுவின் இசைநிகழ்ச்சியில் பங்குபற்றி பாடக பாடகிகள் அனைவரும் சிறப்பான இசை நிகழ்ச்சியொன்றை வழங்கினார்கள்.


மொத்தத்தில் 29ஆம் ஆண்டு "உதயன் பல்சுவை நிகழ்வு மிகவும் சிறப்பாக அமைந்தது. இந்திகழ்வைத் தொய்வின்றி நடத்திச் சென்ற ...... தொகுப்பாளர்க்கும் வாழ்த்துக்கள்.

***நிகழ்ச்சி விமர்சனம்: புட்பா கிறிஸ்ரி** - pushpachristy@gmail.com*






# தேசத்தின் குரல்: கலாநிதி அன்ரன் பாலசிங்கம்




**ஈழத் தமிழ் தேசியத்தின் அரசியல் அச்சாணி (1938 - 2006)**

தமிழ் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில், ஆயுதம் ஏந்தாத போராளிகளுள், ஆயுதங்களுக்குச் சமமான அரசியல் வலிமையைக் கொண்ட ஒரே ஆளுமை எனச் சொல்வதானால், அது கலாநிதி அன்ரன் பாலசிங்கம் என்பதில் ஐயமில்லை.

அவர் ஒரு தனிநபர் அல்ல:
ஒரு அரசியல் குரல்,
ஒரு தேசிய சிந்தனை,
ஒரு அங்கீகரிக்கப்படாத தேசத்தின் முகவரி.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பரிணாம வளர்ச்சி, அதன் சர்வதேச அணுகுமுறை, அதன் பேச்சுவார்த்தைத் தந்திரங்கள் ஆகியவற்றின் பின்னால் நிற்கும் மூளையாக அவர் விளங்கினார்.

### ஆரம்ப வாழ்க்கை: சிந்தனையாளரின் உருவாக்கம் (1938-1970)

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் 1938 ஆம் ஆண்டு மார்ச் 4 அன்று பிறந்தார்.
இளம் வயதிலேயே கல்வி, வாசிப்பு, உலக அரசியல் ஆகியவற்றில் அபார ஆர்வம் கொண்டவர்.

லண்டனில் அவர்:
- பத்திரிகையாளராக,
- பின்னர் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் மொழிபெயர்ப்பாளராக பணியாற்றினார்.

இதுவே அவருக்கு:
- மேற்குலக அரசியல் சிந்தனை,
- இராஜதந்திர மொழி,
- சர்வதேச அரசியல் நடைமுறைகள்
என அனைத்தையும் உள்ளங்கையில் கொண்டு வந்த பயிற்சி காலம்.

### கெரில்லா போரியல் நூலும் தலைவர் பிரபாகரனுடனான சந்திப்பும்

1970களில், பாலசிங்கம் கெரில்லா போர் முறை குறித்து ஒரு முக்கியமான அரசியல்-போரியல் நூலை எழுதியிருந்தார்.

இந்த நூல்:
- இந்தியாவில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த
- தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் கவனத்தை ஈர்த்தது.

இதன் விளைவாக:
- பிரபாகரன் - பாலசிங்கம் தொடர்பு,
- அதுவே தமிழ் தேசிய போராட்ட வரலாற்றின் முக்கிய அரசியல் கூட்டணி ஆக மாறியது.

### 1983 - கறுப்பு யூலைக்குப் பின்: போராட்டத்திற்குள் அரசியல்

1983 கறுப்பு யூலை இன அழிப்புக்குப் பின், பாலசிங்கம் தம்பதியினர் இங்கிலாந்தை விட்டு வெளியேறி இந்தியாவுக்குக் குடிபெயர்ந்தனர்.

இந்தியாவில்:
- பயிற்சி முகாம்களில் இருந்த இளம் போராளிகளுக்கு
- அவர் அரசியல் வகுப்புகளை நடத்தினார்.

இதன் முக்கியத்துவம்:
போராட்டம் உணர்ச்சியல்ல
அது வரலாற்று நீதி,
தேசிய உரிமை,
சுய தீர்மான உரிமை.

இந்த அரசியல் கல்வியே:
- புலிகள் இயக்கத்தை ஒரு கட்டுப்பட்ட தேசிய விடுதலை இயக்கமாக மாற்றியது.

### திம்பு பேச்சுவார்த்தை - 1985: தேசிய கோட்பாட்டின் பிரகடனம்
### திம்பு பேச்சுவார்த்தை (1985)

ஈழத் தமிழ் அரசியல் வரலாற்றில் முதல் முக்கிய சர்வதேச பேச்சுவார்த்தை.

இதில் பாலசிங்கம்:
- புலிகள் குழுவின் அரசியல் ஆலோசகராக
- "தமிழர் ஒரு தேசிய இனம்" என்ற கோட்பாட்டை
- ஆவணமாகப் பதிவு செய்தார்.

திம்பு கோட்பாடுகள்:
- தமிழர் ஒரு தனி தேசிய இனம்
- தமிழர் தாயகம்
- சுய தீர்மான உரிமை
- முழுமையான அரசியல் சமத்துவம்

இவை அனைத்தும் பாலசிங்கத்தின் சிந்தனை வடிவமைப்பின் விளைவு.

### தலைமை பேச்சுவார்த்தையாளர்: அங்கீகரிக்கப்படாத தேசத்தின் இராஜதந்திரி

காலப்போக்கில்:
- பாலசிங்கம்
- புலிகளின் தலைமை பேச்சுவார்த்தையாளர்,
- அரசியல் ஆலோசகர்,
- பிரபாகரனின் நெருங்கிய நண்பர்.

### நோர்வே, இந்தியா, சர்வதேச பேச்சுவார்த்தைகள்

அவர்:
- ஆங்கிலப் புலமை,
- தர்க்கரீதியான வாதம்,
- சர்வதேச சட்ட மொழி மூலம்,
தமிழர் பிரச்சினையை உலக அரசியல் மேசைக்கு கொண்டு வந்தார்.

"Tamil people are a nation with the right to self-determination" என்ற வாக்கியம், உலக அரசியல் பதிவுகளில் பதியப்பட்ட தருணம் - பாலசிங்கம்.

### 2002 பத்திரிகையாளர் மகாநாடு: வரலாற்று ஆவணம்

ஏப்ரல் 2002, இலங்கை அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன் நடைபெற்ற அரிய பத்திரிகையாளர் மகாநாடு.

பிரபாகரனுடன்:
- மொழிபெயர்ப்பாளர்,
- அரசியல் விளக்கரராக
பாலசிங்கம் பங்கேற்றார்.

இன்று வரை அது:
- ஒரு வரலாற்று ஆவணம்,
- ஒரு தேசிய அரசியல் அறிக்கை.

### மார்க்சியத்திலிருந்து தமிழ் தேசியம்

ஆரம்பத்தில்:
- மார்க்சியவாதி

பின்னர்:
- ஈழத் தமிழரின் வரலாற்று அனுபவத்தின் அடிப்படையில்
- தமிழ் தேசிய அரசியல் கோட்பாட்டை வரையறுத்தவர்.


வர்க்கப் போராட்டத்தை விட, இன அடக்குமுறையே மைய பிரச்சினை என அடையாளம் கண்டவர்.

### எதிரிகளையும் உலகையும் எதிர்கொண்ட சாமர்த்தியம்

நீலன் திருச்செல்லம், லக்ஸ்மன் கதிர்காமர், மற்றும் சர்வதேச பொறுப்பற்ற ராஜதந்திரிகள்.

இவர்களை:
- தனித்து,
- அறிவால்,
- அரசியல் தர்க்கத்தால் எதிர்கொண்ட அரிய ஆளுமை.

### மறைவும் அரசியல் வெற்றிடமும் (2006)




14.12.2006 தமிழ் தேசிய போராட்டத்தின் உச்சகட்டத்தில் தேசத்தின் குரல் மௌனமானது.

அவரது மறைவு:
- ஒரு பெரும் அரசியல் வெற்றிடம்,
- போராட்டத்தின் பின்னாளைய வரலாற்றில் திரும்ப முடியாத இழப்பு.

இறுதியாகக் கூறுவதாயின் அன்ரன் பாலசிங்கம் அவர் ஒரு மனிதர் அல்ல: அவர் ஒரு அரசியல் காலம்.
ஆயுதமற்ற போராளி, ஆயுதங்களுக்குச் சமமான சிந்தனையாளர், தமிழர்களின் அரசியல் முகவரி.
இனத்தின் அரசியல் முகம் - தேசத்தின் குரல்.

**எழுதியவர்: ஈழத்து நிலவன்**
**தமிழ்த் தேசிய வரலாற்றாசிரியர்**
**உலக அரசியல், பொருளாதாரம், உளவுத்துறை, இராணுவ ஆய்வாளர்**

# சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சருடன் தமிழ் தேசிய பேரவையினர் சந்திப்பு – ஏனைய கட்சிகளின் தலைவர்களுடனும் விரைவில் சந்திப்பு!




தற்பொது சென்னைக்குப் பயணித்துள்ள கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த்தேசியப் பேரவையினர் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்ராலினை தலைமைச் செயலகத்தில் 18ம் திகதி அன்று வியாழக்கிழமை (18.12.2025) சந்தித்துப் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர். இச்சந்திப்பில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், அக்கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் சுகாஸ் கனகரத்தினம், கொள்கைப் பரப்புச் செயலாளர் நடராஜா காண்டீபன், தேசிய அமைப்பாளர் த. சுரேஸ் ஆகியோர் பங்கேற்றிருந்தார்கள்.

இச்சந்திப்பின்போது தமிழ்த்தேசியப் பேரவையினரால் இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து ஏக்கிய ராஜ்ய அரசியலமைப்பு நிறைவேற்றப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், புதிய அரசாங்கம் உருவாக்கவுள்ள புதிய அரசியலமைப்பில் தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில், சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய சமஸ்டி முறைமை உருவாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்குத் தமிழக அரசு இந்நிய மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மேலும், பொருளாதார ரீதியாகப் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ள இலங்கை அரசாங்கம் இந்தியாவின் பங்களிப்பின்றி வளர்ச்சியடைய முடியாது. தமிழகத்தோடு பொருளாதார ரீதியில் நெருக்கமான உறவையும் தொடர்பாடலையும் உருவாக்காமல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியென்பதும் பாரிய சவாலாகவே இருக்கும். இதன் பின்னனியில் இலங்கையின் மீது கணிசமான அழுத்தத்தை ஏற்படுத்தி, தமிழர்கள் விரும்பும் தீர்வை இந்தியாவினால் சாத்தியமாக்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

அத்தோடு, தமிழக மற்றும் ஈழக் கடற்றொழிலாளர்கள் பிரச்சினை தொடர்பாகவும் உரையாடி இருந்தார்கள். நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருக்கும் தமிழக மீனவர்களின் எல்லை தாண்டும் பிரச்சினையை இலங்கை அரசு தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி தமிழகத்தையும் ஈழத் தமிழர்களையும் நிரந்தரப் பகையாளிகளாக மாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது என்றும், இதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி இந்திய நலன்களுக்கு முரணான வெளிச்சக்திகள் இலங்கையில் காலூன்றி வருவதனையும் சுட்டிக்காட்டியிருந்தார்கள். எல்லை தாண்டிய மீன்பிடியைக் கட்டுப்படுத்தி இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக்காணத் தமிழக அரசு தலையிடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

சந்திப்பின் முடிவில் தமிழ்த்தேசியப் பேரவையின் சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிய அரசியல் அமைப்புத் தொடர்பாகவும் தமிழக மீனவர்கள் எல்லை தாண்டும் பிரச்சினை தொடர்பாகவும் முதலமைச்சர் மு.க. ஸ்ராலினிடம் தனித்தனியான கோரிக்கைக் கடிதங்களைக் கையளித்தார். முதலமைச்சரின் சந்திப்பின் பின்னர் ஏனைய கட்சிகளின் தலைவர்களையும் விரைவில் சந்திக்கவிருப்பதாகத் தமிழ்த் தேசியப் பேரவையின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்பின்போது இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவருமான தொல். திருமாவளவனும் கலந்துகொண்டிருந்தார்.

# இந்தியத் துணைத் தூதுவருக்கும் சாவகச்சேரி நகரசபையினருக்கும் இடையில் உத்தியோகபூர்வ சந்திப்பு!




யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவர் சாய் முரளிக்கும் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஸ், உபதவிசாளர் ஞா. கிஷோர், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நகராட்சி மன்ற செயலாளர் செ. நிசான் ஆகியோருக்கிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு 17ம் திகதி புதன்கிழமை அன்று காலை யாழ். இந்திய துணைத்தூதரகத்தில் இடம்பெற்றது.

இதன்போது நகராட்சி மன்றின் செயற்பாடுகள் மற்றும் பல்வேறு தேவைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் நகராட்சி மன்றிற்கு இந்திய உதவியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக இந்தியத் துணைத் தூதரகத்தினால் இந்திய கலைஞர்களைக் கொண்டு யாழில் கலை கலாச்சார நிகழ்வுகளை நடத்துகின்ற வேளை நகராட்சி மன்ற பொன்விழா மண்டபத்திலும் இந்திய கலைஞர்களைக் கொண்டு நிகழ்வுகளை நடத்துதல், நகராட்சி மன்ற மைதான புனரமைப்பு, சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்கும் இந்தியாவில் உள்ள நகராட்சி ஒன்றுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தி ஆலோசனை மற்றும் வளப் பரிமாற்றங்களில் ஈடுபடுதல், உறுப்பினர்கள், ஊழியர்களுக்கு பயிற்சிகள் மற்றும் நேரடி களத்தரிசிப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற கோரிக்கைகளை நகராட்சி மன்றத்தினர் முன்வைத்தனர்.

குறித்த விடயங்கள் தொடர்பில் கரிசனையோடு கலந்துரையாடிய துணைத்தூதுவர் நகராட்சி மன்றத்தினரோடும் தமிழ் மக்களின் நலனிலும் ஆதீத அக்கறையுடன் தொடர்ந்தும் பணியாற்றுவோம் எனத் தெரிவித்தார்.

இந்திய துணைத் தூதரவருடனான சந்திப்பு மிகவும் ஆக்கபூர்வமாகவும் சிநேகபூர்வமாகவும் இருந்தது என நகராட்சி மன்றத்தினரும் தெரிவித்தனர்.

# திஸ்ஸ விகாரையின் தேரருக்கு அதிகாரம் வழங்கும் வகையில் இணையும் அரசும் – எதிர்க்கட்சியும் !



தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி, ஜின்தோட்டை நந்தாராம தேருக்கு பௌத்த கட்டமைப்பின் உயரிய அதிகாரங்களை வழங்கும் நிகழ்வு, அரசு மற்றும் எதிர்க்கட்சியின் இணைத்தலைமையில் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று இடம் பெறவுள்ளது.

பௌத்த மரபுகளின் அடிப்படையில், இலங்கையின் மாபெரும் வம்சங்களில் ஒன்றாக அறியப்படும் அமரபுர ஸ்ரீ கல்யான வம்சக் குழுவின் வடஇலங்கை தலைமைச் சங்கநாயகராக தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி தெரிவாகியுள்ளார். அவரிடம் அதிகாரங்களைக் கையளிக்கும் நிகழ்வு கொழும்பில் எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறவுள்ளது.


எதிர்க்கட்சித் தலைவர் சஜித், புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அமைச்சர் சுனில் செனவி ஆகியோர் இந்த நிகழ் வுக்கு இணைத்தலைமை வழங்கவுள்ளனர்.

தையிட்டி திஸ்ஸ விகாரை அமைக்கப்பட் டுள்ள காணிகளின் உரிமையாளர்கள், தமது காணிகளை தம்மிடம் மீள வழங்க வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர். இந்த விடயத்துக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என்று அரசாங்கம் கூறுகின்ற போதிலும் காணிகளின் உரிமையாளர்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டு வருகின்றனர். இவ்வாறான நிலையிலேயே திஸ்ஸ விகாரையின் விகாராதிபதிக்கு அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன.

அத்துடன், அரசும் பிரதான எதிர்க்கட்சி யான ஐக்கிய மக்கள் சக்தியும் பல்வேறு விடயங்களில் முரண்படுகின்ற போதிலும், தமிழர்களின் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சர்ச்சையான பின்னணிகளைக் கொண்ட விடயத்தில், ஓரணியில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள்
Canadian News

**I look back at the last 10 years, and it has not always been easy. But you have been with me every step of the Political Journey - MP for Scarborough Centre-Don Valley East -**




# "நான் கடந்து வந்த 10 ஆண்டு கால அரசியல் பயணத்தை திரும்பிப் பார்க்கிறேன், அது எப்போதும் எளிதாக இருந்ததில்லை."

# அரசியலில் பத்து ஆண்டுகளைக் கடந்த வெற்றி விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் தெரிவிப்பு!



"உங்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினராக நான் கடந்து வந்த 10 ஆண்டு கால அரசியல் பயணத்தை திரும்பிப் பார்க்கிறேன், அது எப்போதும் எளிதாக இருந்ததில்லை. என்பதையும் நான் உணர்கின்றேன். எவ்வாறாயினும் என் மீது நீங்கள் அனைவரும் வைத்த நம்பிக்கைக்காக நன்றி கூறுகின்றேன்".

இவ்வாறு தனது அரசியலில் பத்து ஆண்டுகளைக் கடந்த வெற்றி விழாவில் ஸ்காபுறோ மத்தி - டொன்வெலி கிழக்கு தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் தெரிவிததார். கடந்த திங்கட்கிழமையன்று 15ம் திகதி ஸ்காபுறோ கென்னடி கொன்வென்சன் சென்றர் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி வெற்றிவிழாவில் தமிழ் பேசும் அன்பர்களும் ஆதரவாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அங்கு உரையாற்றுகையில், "எனக்கு ஆதரவை வழங்கும் வகையில் நீங்கள் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியிலும் என்னுடன் இருந்திருக்கிறீர்கள். நெருக்கமாக பயணித்து உள்ளீர்கள். பத்து வருடங்களாக நாங்கள் கூடி தேர்தல் முடிவுகள் வருவதைப் பார்த்து வருகிறோம், கனடா முழுவதும் ஒரு சிவப்பு அலை வீசுவதைப் பார்த்து, நமது விருப்பத்திற்குரிய கனடா தேசம் முழுவதிலுமிருந்து வரும் கனடியர்கள் நம்பிக்கைக்குரிய எதிர்காலத்தைத் தேர்ந்தெடுத்தனர்.

நமது அடுத்த தலைமுறைக்கு சிறந்த கனடாவை உருவாக்க முடியும் என்று கூறிய ஒரு எதிர்காலம்.நமது பன்முகத்தன்மை நமது பலவீனம் அல்ல - அது நமது பலம். நீங்கள் கடினமாகவும் நேர்மையாகவும் உழைத்தால், உங்கள் குடும்பத்தை ஆதரிக்கவும் நல்ல வாழ்க்கையை நடத்தவும் உதவும் தேசமாக எமது கனடா விளங்குகின்றது.

ஒரு பொது ஊழியராகவும் சமூக அமைப்பாளராகவும், இரண்டு ஆண் குழந்தைகளின் தாயாகவும், கனடாவுக்கு குடியேறியவராகவும், ஒட்டாவாவில் ஓரங்கட்டப்பட்ட எங்கள் சமூகத்தின் குரல்களைக் கண்டு சோர்வடைந்த என் மீது நீங்கள் வைத்த நம்பிக்கையால் நான் மிகவும் தாழ்மையுடன் இருந்தேன்.

2019, 2021 மற்றும் கடந்த வசந்த காலத்தில் மீண்டும் உங்களுக்காகப் போராட என்னைத் திருப்பி அனுப்பியதற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

எங்கள் கட்சி நடுத்தர வர்க்கத்தைப் பற்றிப் பேசியது போல, நடுத்தர வர்க்கத்தில் சேர கடினமாக உழைப்பவர்களின் குரல்களை நான் எழுப்பியபோது நீங்கள் என்னுடன் இருந்தீர்கள். முன்னேற முடியாத தனது குடும்பத்தை ஆதரிக்க இரண்டு வேலைகளைச் செய்யும் மனிதன்.

ஆரோக்கியமான உணவை மேசையில் வைத்திருக்கவும், பள்ளிக்குப் பிறகு தனது குழந்தைகளை வைத்திருக்க ஒரு வழியைக் கண்டுபிடிக்கவும் ஒவ்வொரு காசோலையையும் நீட்டிக்கும் தாய்.

கல்நேர பராமரிப்புக்கு பணம் செலுத்த முடியாததால் குழந்தைகளைப் பராமரிக்க யார் தனது வேலையை விட்டு வெளியேற வேண்டும்.

பெற்றோரின் வீட்டை விட்டு வெளியேறி தங்களுக்கென ஒரு இடத்தை வாங்க முடியுமா என்று இளம் தம்பதிகள் யோசிக்கிறார்கள்.

மளிகைப் பொருட்களின் விலையை ஈடுகட்ட முடியாமல் ஓய்வூதியம் பெறுவதைப் பார்க்கும் மூத்தவர்.

ஒட்டாவாவில் நீண்ட பகல் மற்றும் இரவுகளில் என்னைத் தொடர்ந்து வழிநடத்துவது அவர்களின் கதைகளும் அவர்களின் முகங்களும் தான்.

புற்றுநோயுடன் போராடி எனது உடல்நல நெருக்கடியை எதிர்கொண்டபோது நீங்கள் என்னுடன் இருந்தீர்கள். உங்கள் வார்த்தைகளும் உங்கள் ஆதரவும் உங்கள் பிரார்த்தனைகளும் இந்த கடினமான காலகட்டத்தில் என்னைத் தாங்கின. ஆரம்பத்தில் மிகவும் தனிமையான நாட்களில் நீங்கள் என்னுடன் இருந்தீர்கள், பாலஸ்தீனத்தில் அமைதி, நீதி மற்றும் மனித உரிமைகளுக்காக நான் குரல் எழுப்பினேன்.

சில நேரங்களில் அது மிகவும் தனிமையாக இருந்தது, ஆனால் இன்றும், ஒவ்வொரு நாளும், ஒட்டாவாவிலும் கனடா முழுவதிலும் அதிகமான மக்கள் நமக்கு எப்போதும் சுயமாகத் தெரிந்ததை உணர்கிறார்கள் - எமது அரசாங்கம் மக்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு உதவும் வகையில் செயற்படுகின்றது" என்றார்.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கு வேலணையில் நடத்தப்பெற்ற நினைவுகூரல் நிகழ்வு!



தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கத்தின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் வேலணை வங்களாவடி பொது நினைவு சதுக்கத்தில் 14ம் திகதி அன்று இடம்பெற்றது.

குறித்த நினைவுகூரலை அன்று காலை (14) தீவக நினைவேந்தல் குழு ஏற்பாடு செய்து முன்னெடுத்திருந்தது. முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமான குறித்த நினைவுகூரல் நிகழ்வில் தேசத்தின் குரலின் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து ஈகச் சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலிக்கப்பட்டது.

இதன்போது ஏற்பாட்டுக் குழுவினருடன், ஊர்காவற்றுறை பிரதேச சபையின் உப - தவிசாளர் மற்றும் பொதுமக்களும் இணைந்து ஈழ விடுதலை போராட்டத்தின் அரசியல் இராஜதந்திரம் மிக்கவராக வலம் வந்த அன்ரன் பாலசிங்கம் அவர்களது நினைவுகளை மீட்டி அஞ்சலித்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர்களிற்கான திறன்விருத்தி பயிலரங்கு!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் பல்கலைக்கழக ஊழியர்களிற்கான திறன்விருத்தி முழுநாள் பயிலரங்கு கடந்த 17.12.2025 (புதன்கிழமை) அன்று பௌதீகவியல் கூட்ட அரங்கத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் திரு. யசோதன் தலைமையில் நடைபெற்ற பயிலரங்கினை துணைவேந்தர் பேராசிரியர். சி. சிறிசற்குணராசா அவர்கள் தொடக்கவுரையாற்றி தொடக்கி வைத்திருந்தார்.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், விடுதிக் காப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகப் பணிநிலை உத்தியோகத்தர்களிற்கு நடைபெற்ற குறித்த பயிலரங்கில் வளவாளர்களாக திரு. இரட்ணசிங்கம் (ஊக்கமும் மனிதவள மேலாண்மையும்), யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் திரு. இ. செந்தில்மாறன் SLEAS (பணித் திறன் மற்றும் திறமையான பணிமுறை), பேராசிரியர். பி. பிரதீப்காந் (பங்கேற்புடன் மேற்கொள்ளப்படும் பணிகள் மற்றும் அரசாங்க விதிமுறைகள்), சட்டத்தரணி கலாநிதி. கு. குருபரன் (தொழிலாளர் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்) ஆகியோர் பயிலரங்கினை வழிநடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிர்வாக ஊழியர்களிற்கான தலைமைத்துவத் திறன், குழுப் பண்பாடு மற்றும் மனித உறவுகள், நேர்மறைச் சிந்தனைகள் மற்றும் பணித்திறன் வளர்ப்பு, நேர மேலாண்மை, உற்பத்தித் திறனை உயர்த்தும் உத்திகள், தொடர்பு மற்றும் ஒத்துழைப்புத் திறன், பங்கேற்பு அடிப்படையிலாக பணிமுறைகள், பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு தொடர்புடைய அரச விதிமுறைகள், பொறுப்புணர்வு மற்றும் ஒழுங்குமுறைப் பண்பாடு, வேலைச்சூழலில் கணக்கெடுப்பு மற்றும் வெளிப்படை, பணி விதிமுறைகள் மற்றும் சட்டங்கள், பணிப் பாதுகாப்பு, பணியிட முறையீடுகள் மற்றும் தீர்வுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் திறன்விருத்தி பயிலரங்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டமை குறிப்பித்தக்கது.





# பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை இயங்க வைக்கும் வகையில் கிளிநொச்சியில் ஆலோசனைக் கூட்டம்!



பரந்தன் இரசாயனத் தொழிற் சாலையை மீண்டும் இயங்கு நிலைக்கு கொண்டு வருதல் தொடர்பில் கிளி நொச்சி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் 18ம் திகதி புதன்கிழமை அன்று ஆராயப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அன்று புதன்கிழமை காலை, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் திறன் விருத்தி மண்டபத்தில் நடைபெற்றது.

டித்வா புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள், இதுவரை மேற்கொள்ளப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் மற்றும் எதிர்வரும் காலத்தில் முன்னெடுக்க வேண்டிய மீள்கட்டியெழுப்பல் பணிகள் குறித்து கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப் பட்டது.

மேலும், மாவட்டத்திற்கு ஒதுக்கப் பட்ட அபிவிருத்தி நிதிகளின் பயன்பாடு, மத்திய மற்றும் மாகாண திணைக் களங்களின் திட்ட முன்னேற்றங்கள், புதிய திட்டங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிகள் ஆகியவை தொடர் பிலும் மதிப்பாய்வு செய்யப்பட்டது.

சட்டவிரோத மணல் அகழ்வால் ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதிப்புகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்ட துடன், அவற்றைத் தடுக்கும் வகையில் உரிய அதிகாரிகளுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அத்துடன், பரந்தன் இரசாயனத் தொழிற் சாலையை மீள இயக்கும் திட்டம் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பிலும் விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

மக்களின் நலன், மாவட்டத் தின் நிலையான அபிவிருத்தி மற்றும். அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய அவசியம் என்பதே இக்கூட்டத்தின் மையக் கருத்தாக அமைந்தது.

# ஊழியர்களின் அசமந்தம் யாழ். மாநகரைப் பாதிக்கும் நடைமுறைகளை இறுக்குங்கள் – மயூரன் சுட்டிக்காட்டு!



ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எவையும் நடைமுறைப்படுத்தப்படாமை ஊழியர்களின் அர்ப்பணிப்பின்மையை வெளிப்படுத்துகின்றது. இந்த அசமந்தப்போக்கால் மாநகரசபை இடர்களைச் சந்திக்கின்றது என்று மாநகரசபை உறுப்பினர் மயூரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ். மாநகரசபை அமர்வு 17ம் திகதி புதன்கிழமை இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஆக்கபூர்வமான பலதீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதும் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பொலித்தீன் பாவனைத் தடை, களியாட்ட நிகழ்வு ஒழுங்குபடுத்தல், சுகாதார நடைமுறை போன்று பல விடயங்கள் தொடர்பில் ஆறு மாதங்களாக காத்திரமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டபோதும் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஊழியர்கள் பலர் முழுநேரப்பணி செய்வதில்லை. மாநகரசபை உறுப்பினர்களின் உச்சகட்டப் பணி என்ன என்பது தெரிந்தாகவேண்டும். சிறந்த சுகாதாரம்மிக்க மாநகரசபையாக வளர்வதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். எனவே எதிர்வரும் ஆண்டிலிருந்து தண்டப்பணம் அறவிடுதல், சுகாதாரநடை முறைகள் என்பவற்றை இறுக்கமாக நடைமுறைப்படுத்த வேண்டும் - என்றார்.

# யாழ்ப்பாணம் பழைய பூங்கா, எமது மரபுரிமைச் சொத்தாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும்

## இயற்கை நண்பர்கள் இயக்கம் வேண்டுகோள்!

யாழ்ப்பாணம் பழைய பூங்கா மரபுரிமைச் சொத்தாக பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் என இயற்கை நண்பர்கள் இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக இயற்கை நண்பர்கள் அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

தாவரவியல் பரிமாணம், அரிதாகிச் செல்லும் பாரம்பரிய முதுமரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்பது உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுரிமை நடைமுறைகளில் ஒன்று.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் வானளாவ வளர்ந்து நிற்கும் முதுமரங்கள் பல யாழ்ப்பாணத்தில் இப்பொழுது உயிருடன் இருக்கும் எல்லோரையும் விட வயதில் மூத்தவை. வாகன நெரிசல் மிக்க யாழ். நகரின் கரிக்காற்றை உறிஞ்சிச் சுத்தம் செய்யும் காபன் வடிகட்டியாக பழைய பூங்காவில் உள்ள மரங்கள் செயற்பட்டு வருகின்றன.

அபிவிருத்தி செயற்பாடுகளின் போது இயற்கையை பாதிக்காத வகையில் குறிப்பாக முதுமரங்களைப் பேணிப் பாதுகாப்பது என்பது உலகில் ஏற்றுக்கொள்ளப் பட்ட மரபுரிமை நடைமுறை.

போர்க் காலத்திலேயே பராமரிக்கப்பட்ட ஒரு மரபுரிமைப் பிரதேசத்தை அபிவிருத்தியின் பெயரால் அழியச் செய்யும் செயற்பாடுகள் அனைத்தும் பண்பாட்டு இன அழிப்பு என்பதாகவே பலரால் கூறப்படுகின்றது. இது தொடர்பாக இயற்கையை நேசிப்பவர்கள் ஆழமாக சிந்திக்க வேண்டும்.

தற்போது உள்ள தலைமுறையை விட வயதால் மூத்த அந்த மரங்களை வெட்டுவதை மௌனமாக இருந்து ஆதரித்து - தமது வேர்களைப் பாதுகாக்க முடியாத ஒரு மக்கள் கூட்டம் திரண்டு ஒரு தேசமாக நிமிர முடியாது.

எனவே மரபுரிமைச் சொத்துக்களை பேணிப் பாதுகாக்க வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்.மாநகர சபை முதல்வர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# இவ்வார ராசிபலன்

**19-12-2025 வெள்ளி தொடக்கம் 25-12-2025 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

**"ஜோதிட மகரிஷி"**

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: **0091-9840160068 9940431377**




**மேஷம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். வம்பு தும்புகள் ஒழியும். பூர்வீக சொத்து சேரும். உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். கனவு தொல்லை உண்டு. தேவைகள் பூர்த்தியாகும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். புதிய வாய்ப்புத்தேடி வரும். இனிய தகவல் வந்து சேரும். புதியத்தொழில் அமையும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உடல் மனநிம்மதி தரும். பாராட்டுப் பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. செல்வாக்கு உயரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பான செய்திகள் வரும். புதிய முதலீடு தவிர்க்கவும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். புதிய நட்பை தவிர்க்கவும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். மாணவர்கள் உற்சாகம் கூடும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். அந்நிய தேசப்பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,7,8,1

அதிர்ஷ்ட நிறம்: ஆழந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,L




**ரிஷபம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். செய்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மனஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். சுபகாரியம் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். புத்தி சாதுர்யம் பெருகும். தந்தை உடல்நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளால் தாமதம் ஏற்படும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். இல்லத்தில் அமைதி கூடும். நீண்ட நாள் நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. பிரியமானவர்களை சந்திப்பீர்கள். சுபகாரியம் கைகூடும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பொது வாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,5,1

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**மிதுனம்:** மனதில் இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. காதலர்கள் தம்பதியாவார்கள். கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. வஸ்திர தானம் வளம் சேர்க்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். இடமாற்றம் நன்மை தரும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் தரும். தன வரவில் தடங்கல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல்நலம் பாதிக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். பிரயாணம் ஏற்படும். உணவ விடுதி லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். உலோகத் தொழில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சுப்ரமணியர், அதிர்ஷ்ட எண்: 8,4,3,2

அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**கடகம்:** பிள்ளைகளால் சொத்து சேரக்கூடிய வாரம். தாராளமான தனவரவு உண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புகள் அடங்கும். சிறப்புக்கள் சேரும். பொறுப்புக்கள் கூடும். குடும்ப அன்யோன்யம் கூடும். வாய்ப்புகள் தேடி வரும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். கையிருப்பு கரையும். உடல்நலம் சீராகும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மாணவர் திறமை பளிச்சிடும். சிறிய இடையூறு ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். சுய பலம் கூடும். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் குதூகலம் கூடும். தங்க நகைகள் சேரும். இடையூறுகள் அதிகமாகும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். புகழ்ச்சி அதிகரிக்கும். வெளியூர் பயணம் ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். ஆரோக்கியம் சீராகும். குடும்ப மேன்மை தரும். எந்திர தொழிலில் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வாகன அபிவிருத்தி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,2,7,9

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,K




**சிம்மம்:** நம்பிக்கைக்குரியவர்களை சந்திக்கும் வாரம். வழக்குகள் வெற்றி தரும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். கமிஷன் தொழில் கவனம் தேவை. ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். விடாமுயற்சி அவசியம். போட்டிகள் மறையும். நல்லோர்களின் நட்பு கிட்டும். நிதி நிலைமை சீராகும். வழிபாடு மாற்றம் தரும். முயற்சிகள் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கைகூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சியில் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. அணிகலன் சேரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். திடீர் பயணம் ஏற்படும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,9

அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,F




**கன்னி:** இக்கட்டான சூழ்நிலைகள் அகலும் வாரம். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைகூடும். அணிகலன் சேரும். ஆலோசனை பலன் தரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். புதிய எண்ணம் நிறைவேறும். நண்பர்களால் நன்மையுண்டு. வருத்தங்கள் மறையும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். கல்வியில் கவனம் தேவை. காதல் கசக்கும். வழக்குகள் சாதகமாகும். தொழில் மேன்மை உண்டு. விவசாயம் பலன் அளிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத்தடை ஏற்படும். சோம்பல் அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறும். வேலை வாய்ப்புக் கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாதிப்புகள் அகலும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். உடல்நலம் கவனம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 3,7,5,1

அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:: D,H




**துலாம்:** பெருமைகள் சேரும் வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பழைய கடன் வசூலாகும். பயணம் அனுகூலம் தரும். வாகனச்செலவு ஏற்படும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். உறவினர்களால் நன்மை உண்டு. காரியத்தடை ஏற்படும். கடன் சுமை அதிகரிக்கும். மாணவர்கள் கவனம் தேவை. கலைத்துறையில் திருப்பம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. பொருள் இழப்பு ஏற்படும். போட்டிகள் உருவாகும். மெத்தனப்போக்கு விலகும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். தகுதிகள் உயரும். புதிய எண்ணங்கள் உருவாகும். கவலைகள் ஒழியும். கடன் பிரச்சனைகள் அகலும். சுபச்செலவு அதிகரிக்கும். அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். அந்தஸ்து உயரும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். கலைத்தொழிலில் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். பொறுப்புக்களால் சிறப்பு சேர்க்கும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். மறைமுக எதிர்ப்பு விலகும். பணிவான பேச்சுகள் தேவை. சச்சரவுகள் அகலும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 5,3,7,9

அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். நன்மைகள் பெருகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பொருளாதாரம் உயரும். சிந்தனைகள் மேலோங்கும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. உதவும் குணம் அதிகரிக்கும். வணிகத்தொழில் வளம் கூடும். உணவுத்தொழில் உயர்வு தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. தொலைபேசி தகவல் தொல்லை தரும். பங்குத்தொழில் பணம் தரும். பழைய பாக்கி வசூலாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பாராட்டுக்கள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். ஆடை, அணிகலன் சேரும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோஷம் அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பெருமைகள் சேரும். திட்டமிட்ட செயல் தேவை. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். பணப்பற்றாக்குறை நீங்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. எள் தானம் ஏற்றம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 5,4,1,9

அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**தனுசு:** வறுமைகள் விலகும் வாரம். விவசாயிகள் பயன்பெறும். தெளிவான முடிவுகள் உதயமாகும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். நண்பர்கள் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் தவிடுப்பொடியாகும். கௌரவத்தில் கவனம் தேவை. புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடி பொருட்கள் சேதமாகும். கலக்கமான மனநிலை காணப்படும். பிரார்த்தனையால் பலன் உண்டு. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். அதிகாரம் உயரும். அணிமணிகள் சேரும். வாகன யோகம் உண்டு. கட்டிட தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். தேச பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். பொருளாதாரம் மேம்படும். திருமண தீபம் சுடர்விடும். கடன் பாக்கிகள் வசூலாகும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு.

***(தொடர்ச்சி 22 பக்கம்)***


Markham Event Palace
உங்கள் கனவுகளை
விழாவாக நடத்தும் இடம்!
பிறந்தநாள் கொண்டாட வேண்டும்!
திருமண மகிழ்வை நெஞ்சில் நிற்கும்
நினைவாக மாற்ற வேண்டும்!
அல்லது உங்கள் வீட்டு எந்தவொரு நிகழ்வாக
இருந்தாலும், நியாயமான விலை, அழகான சூழல்,
மனநிறைவான சேவையுடன் நடத்த மிகச் சிறந்த,
இடம் — Markham Event Palace!
ஒலிச் — ஒளி வசதிகள்
பரந்த வாகனத்தரிப்பிடம் உள்ளிட்ட உங்கள் விழாவை
சிறப்பாக்கும் அனைத்து வசதிகளும் உண்டு!
4345 14th Avenue, Markham
உங்கள் நிகழ்வை சிறப்பாக மாற்ற அழையுங்கள்
Raj- 416-984-9633
Email – markhameventplace@gmail.com

# இவ்வார ராசிபலன்

(20 பக்கத் தொடர்ச்சி)

**தனுசு:** உழைப்பில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனநெருக்கடிகள் தீரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். பணியில் பாராட்டு கிட்டும். உடல்நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மகரம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும். பெண்களால் பெருமை உண்டு. எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். திடீர் பயணம் ஏற்படும். மதிப்பு உயரும். மனைவி பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு கூடும். பூமியால் லாபம் உண்டு. குடும்பத்தில் குழப்பம் நீங்கும். சுபச்செலவு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்ள் நிறைவேறும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். ஞாபக மறதி ஏற்படும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. உதவிகள் கிட்டும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வசதிகள் பெருகும். புதுமுயற்சிகள் பலன் அளிக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். சொத்துக்கள் சேரும். உத்யோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். கவனமுடன் செயல்பட வேண்டும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,7,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y




**கும்பம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். யோகமான காலம். எதிர்பார்ப்பினால் பலன் உண்டாகும். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும். தாய்வழி உறவு நன்மை தரும். பயணம் தடைப்படும். இடமாற்றம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. வெற்றி சீக்கிரம் கிட்டும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை அமையும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். பூமியால் லாபம் அடைவீர்கள். புதிய பொருள் சேரும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். பாராட்டுக்கள் கிடைக்கும். மற்றவர் தொல்லைக் குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். கலைத்தொழிலில் திருப்பம் தரும். சமூக சேவை செய்ய முன் வருவீர்கள். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள். முகப்பொலிவு உண்டாகும். உணவு பிரியம் அதிகரிக்கும். வாய்ச்சொல் பலன் உண்டு. தொழில் வளம் கூடும். காதலில் புரிந்துணர்வு இருக்கும். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். உலோகத் தொழில் உயர்வு தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 8,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,R




**மீனம்:** காரியத்தில் வெற்றி காணும் வாரம். ஆதாயம் பெருகும். நிர்வாகத் திறமை கூடும். வீடு, மனை யோகம் உண்டு. அரசாங்க அனுகூலம் உண்டு. இனிய எண்ணம் உதயமாகும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்கள் திறமை பளிச்சிடும். நினைத்தக் காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கலை ஆர்வம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். வீண் செலவு அதிகமாகும். தடைகள் விலகும். தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும். பொன், பொருள் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிதான காரியம் நடைபெறும். குடும்ப மகிழ்ச்சி இருமடங்காகும். சகோதரியால் லாபம் உண்டு. ஒப்பற்ற பலன் சேர்க்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். குடும்ப சச்சரவு ஏற்படும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,6,9
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா GTA, இலத்திரனியல் ஊடக நிறுவன அதிபர் கெங்காதரனுக்கு கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் இவ்வாண்டிற்கான ஊடகம் பணிக்கான விருது

கனடாவில் உள்ள பல்லினப் பத்திரிகையாளர்களுக்கான மிகப்பெரிய அமைப்பான கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் (National Ethnic Press and Media Council of Canada) இவ்வாண்டிற்கான கலை மற்றும் ஊடகம் சார்ந்த சிறப்பு விருது கனடா GTA, இலத்திரனியல் ஊடக நிறுவனத்தின் அதிபர் கெங்காதரன் அவர்களுக்கு வழங்கப்பெற்றது.

12-12-2025 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற மேற்படி விருதுகள் வழங்கும் நிகழ்வில் கனடாவின் மத்திய - மாகாண - மற்றும் நகராட்சி அரசுகளின் உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் என பலர் கலந்து கொண்டு விருதுகளை வெற்றியாளர்களுக்கு வழங்கினர்.







இங்கே காணப்படும் படங்களில் ஒன்ராரியோ மாகாணத்தின் என்டிபி கட்சியின் தலைவியும் ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்றத்தின் எதிர்கட்சித் தலைவியுமான மெ-ரிட் ஸ்ரைல்ஸ் (Marit Stiles) கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் (National Ethnic Press and Media Council of Canada) தலைவர் தோமஸ் சாரஸ் (Mr.Thomas Saras), "தமிழாரம்" ஊடக நிறுவனத்தின் நிறுவனர் கேதீஸ் அவர்கள். விருது பெற்ற கெங்காதரன் விநாயகமூர்த்தி அவர்களின் துணைவியார் மற்றும் புதல்விகள். இவர்களுடன் கனடிய பல்லின பத்திரிகையாளர்கள் கழகத்தின் (National Ethnic Press and Media Council of Canada) சிரேஸ்ட உப தலைவரும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான லோகன் லோகேந்திரலிங்கம் ஆகியோர் காணப்பெறுகின்றனர்.

**- தகவல்: சத்தியன் ஜீவராஜ்**

# "மலையகத் தமிழ்ச் சமூகங்களின் பாதுகாப்பு உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டும்"

## கனடிய தமிழர் பேரவை தனது ஊடக அறிக்கை வாயிலாக வேண்டுகோள்!

இலங்கையின் மலையகப் பகுதிகளில் சுழற்காற்று டிட்வா காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் ஏற்பட்ட கடும் பாதிப்புகள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவிக்கிறது. பல உயிரிழப்புகள் பதிவாகியுள்ள நிலையில், ஏற்கனவே ஆபத்தான சரிவுப் பகுதிகளில் வசித்து வந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள்-முக்கியமாகத் தமிழ்மொழி பேசும் தோட்டத் தொழிலாளர் சமூகங்கள்-தங்களின் வீடுகளை இழந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தப் பேரழிவு தனிப்பட்ட ஒன்றல்ல. பல தசாப்தங்களாக மலையகத் தமிழ்ச் சமூகங்கள் இலங்கையில் பொருளாதார ரீதியாகவும், இயற்கை அனர்த்தங்களுக்கு அதிகமாகப் பாதிக்கப்படுகின்ற சமூகங்களாகவும் இருந்து வருகின்றன. மீண்டும் மீண்டும் ஏற்படும் வெள்ளம், நிலச்சரிவு போன்ற அனர்த்தங்கள், நீண்டகால பாதுகாப்பு இல்லாத, பாதுகாப்பற்ற நிலங்களில் குடும்பங்கள் வசிக்க வேண்டிய கட்டாய நிலையை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு அனர்த்தத்திற்குப் பிறகும் அதே ஆபத்தான நிலங்களுக்கு மீண்டும் மக்களைத் திருப்பி அனுப்புவது, அவர்களின் உயிர்களை தொடர்ந்தும் ஆபத்தில் ஆழ்த்துகிறது.

இவ்வாறு கனடிய தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையொன்றில் வேண்டுகோள் விடுக்கப்பெற்றுள்ளது.

மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பெற்றுள்ளதாவது: இந்த நிலையில், பாதிக்கப்பட்ட மலையக சமூகங்களுக்காக பாதுகாப்பை முதன்மையாகக் கொண்ட, உரிமை சார்ந்த நீண்டகால இடமாற்றுத் திட்டத்தை உடனடியாக ஏற்குமாறு இலங்கை அரசையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கனடிய தமிழர் பேரவை வலியுறுத்துகிறது. அந்தத் திட்டம் பின்வரும் அடிப்படை கோட்பாடுகளை உட்படுத்த வேண்டும்:

மலையகப் பகுதிகளுக்குள் பாதுகாப்பான நிலங்களுக்கு இடமாற்றம்: சாத்தியமான இடங்களில், அதே மாவட்டங்களுக்குள், பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட நிலங்களில் குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட வேண்டும். வீடமைப்பு, வாழ்வாதாரம், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு விருப்ப அடிப்படையிலான இடமாற்றம்: மலையகப் பகுதிகளில் பாதுகாப்பான நிலம் கிடைக்காத சந்தர்ப்பங்களில், முழுமையான சம்மதத்துடன் இடமாற்றம் விரும்பும் தமிழ்மொழி பேசும் குடும்பங்களுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலம் வழங்கும் விருப்பத் திட்டத்தை CTC ஆதரிக்கிறது. அங்கு நிலவும் தமிழ்ச் சமூகச் சூழல், தமிழ் வழிக் கல்வி மற்றும் பண்பாட்டு தொடர்ச்சி குடும்பங்களின் பாதுகாப்பையும் கௌரவத்தையும் உறுதி செய்யும்.

எந்தவொரு இடமாற்றமும் முழுமையாக விருப்ப அடிப்படையிலும், தகவல் அறிந்த சம்மதத்துடனும், கட்டாயமற்ற முறையிலும் நடைபெற வேண்டும். நில உரிமை பாதுகாப்பு, அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வாழ்வாதார ஆதரவு உறுதி செய்யப்பட வேண்டும்.

மலையகத் தமிழ்ச் சமூகங்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக, இலங்கையின் குடிமக்கள் அமைப்புகள், மனிதாபிமான நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புகளுடன் இணைந்து செயல்பட கனடிய தமிழர் பேரவை தயாராக உள்ளது. மலையகப் பகுதிகளில் மீண்டும் மீண்டும் நிகழும் உயிரிழப்புகளும் வீட்டு இழப்புகளும் ஒன்றை தெளிவுபடுத்துகின்றன: பாதுகாப்பற்ற நிலங்களுக்கு மக்களை மீண்டும் அனுப்புவது தீர்வல்ல. மனிதநேயமும், நீடித்ததுமான, பாதுகாப்பை மையமாகக் கொண்ட அணுகுமுறை உடனடியாகத் தேவைப்படுகிறது. அடுத்த பேரழிவுக்குப் பிறகு அல்ல-இப்போது மலையகத் தமிழ்ச் சமூகங்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

ஊடக தொடர்பு: (647) 300-1973 / dantont@canadiantamilcongress.ca
கனடிய தமிழர் பேரவை

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL RESIDENTIAL VACANT LAND
INDUSTRIAL CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

# NESAN
416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank, TD Canada Trust, National Bank, RFA, First National Financial LP, Manulife, Desjardins, MCAP, Home Trust, Equitable Bank, radius financial, RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164




26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொட்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1550 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 19, 2025

# பல்சுவை தமிழர் விழா"வாக இடம்பெற்ற கனடா உதயன் பத்திரிகையின் 29 ஆவது ஆண்டு நிறைவு விழா







கனடா உதயன் பத்திரிகையின் 29 ஆவது ஆண்டு பல்சுவை கலை விழா டிசம்பர் 13ம் திகதி சனிக்கிழமை அன்று நடைபெற்றது. விழா குத்துவிளக்கேற்றலுடன் ஆரம்பமானது. கனடா கீதம். தமிழ்த் தாய் வாழ்த்துடன் அகவணக்கம் நிகழ்த்தப்பட்டது.
வரவேற்பு நடனம் வர்ணிகா துவாரகன் அவர்களால் ஆடப்பெற்றது.
பிரதம விருந்தினராக தமிழ்மாமணி உலகசாதனையாளர் திரு கந்தசாமி உயிரவன் அவர்கள் மொன்றியலில் இருந்து விழா ஏற்பாட்டாளர்களால் அழைக்கப்பெற்றிருந்தார்.
விழா நிகழ்ச்சிகளை அறிவிப்பாளர்கள் மதிசயன் மற்றும் சாலினி பிள்ளை ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள்.
அனைத்துலகத் தமிழ்ப் பேரவையின் தலைவர் "நிமால் விநாயகமூர்த்தி" அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.
உதயனில் லோகேந்திரலிங்கம் அவர்களின் "கடின உழைப்புடன் சரியான தகவல் தெளிவாக நம்பகரமான செய்திகளையும் கட்டுரைகளையும் அவர் வாசகர்களுக்கு தந்து வருகின்றார் என்று தனது வாழ்த்துரையில் தெரிவித்தார்.
(தொடர்ச்சி 13ம் பக்கம்)

## "I look back at the last 10 years and it has not always been easy. -MP for Scarborough Centre-Don Valley East. Salma Zahid

# "நான் கடந்து வந்த 10 ஆண்டு கால அரசியல் பயணத்தை திரும்பிப் பார்க்கிறேன், அது எப்போதும் எளிதாக இருந்ததில்லை."

### அரசியலில் பத்து ஆண்டுகளைக் கடந்த வெற்றி விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் தெரிவிப்பு!



" உங்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற பாராளுமன்ற உறுப்பினராக நான் கடந்து வந்த 10 ஆண்டு கால அரசியல் பயணத்தை திரும்பிப் பார்க்கிறேன்,
அது எப்போதும் எளிதாக இருந்ததில்லை. என்பதையும் நான் உணர்கின்றேன். எவ்வாறாயினும் என் மீது நீங்கள் அனைவரும் வைத்த நம்பிக்கைக்காக நன்றி கூறுகின்றேன்"
இவ்வாறு தனது அரசியலில் பத்து ஆண்டுகளைக் கடந்த வெற்றி விழாவில் ஸ்காபுறோ மத்தி- டொன்வெலி கிழக்கு தொகுதிக்கான பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் தெரிவித்தார். கடந்த திங்கட்கிழமையன்று15ம் திகதி நடைபெற்ற மேற்படி வெற்றிவிழாவில் தமிழ் பேசும் அன்பர்களும் ஆதரவாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

# சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சருடன் தமிழ் தேசிய பேரவையினர் சந்திப்பு – ஏனைய கட்சிகளின் தலைவர்களுடனும் விரைவில் சந்திப்பு!



தற்பொது சென்னைக்குப் பயணித்துள்ள கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த்தேசியப் பேரவையினர் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்ராலினை தலைமைச் செயலகத்தில் 18ம் திகதி அன்று வியாழக்கிழமை (18.12.2025) சந்தித்துப் பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினர். இச்சந்திப்பில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், அக்கட்சியின் உத்தியோகபூர்வ பேச்சாளர் சுகாஸ் கனகரத்தினம், கொள்கைப் பரப்புச் செயலாளர் நடராஜா காண்டீபன், தேசிய அமைப்பாளர் த. சுரேஸ் ஆகியோர் பங்கேற்றிருந்தார்கள்.
(தொடர்ச்சி 17ம் பக்கம்)

## Canada Provides Humanitarian Assistance in Response to Cyclone and Flooding in Sri Lanka

# இலங்கையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளப் பெருக்கு பாதிப்புக்குக் கனடிய அரசு வழங்கிய மனிதாபிமான உதவிகள்!



அண்மையில் இலங்கையில் அழிவுகளை ஏற்படுத்தி மக்களுக்கு பாரிய இழப்புக்களை ஏற்படுத்திய டித்வா புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு ஆகியவை நினைத்துப்பார்க்கமுடியாத இழப்பை ஏற்படுத்தி, இலங்கையில் பல குடும்பங்களுக்கும், சமூகங்களுக்கும் பேரழிவையும், நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. கனடிய அரசாங்கம் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவாக இருந்து, மனிதாபிமான உதவியைத் தொடர்ந்து வழங்கி, சமூகங்களின் மீட்சிக்கும், அவை மீளக்கட்டியெழுப்பப்படுவதற்கும் உதவியளிக்கும்.
இலங்கையில் அவசர உதவி நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இரண்டு மில்லியன் டொலரிலும் அதிகமான மனிதாபிமான நிதி உதவியை வழங்குவதாக கனடாவின் ராஜாங்க.
(தொடர்ச்சி 7ம் பக்கம்)

